Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 06 செவ்வாய்க்கிழமை (22.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 294

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# இலங்கை தண்டிக்கப்படுவதை ஆதரிக்கமாட்டாது இந்தியா!

## கொழும்பில் இந்தியக் குழு தெரிவிப்பு

இலங்கைக்கு தண்டனை கொடுக்கும் செயற்பாடு களுக்கோ, இலங்கையின் உள்ளக விடயங்களில் அநாவசியத் தலையீடுகள் செய்வதற்கோ இந்தியா ஒருபோதும் ஆதரவாக இருக்காது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு இந்திய தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கே முன்னுரிமை கொடுத்து செயலாற்றுகின்றது. அதேவேளை பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இந்தியா முழுமையான பங்களிப்பைச் செய்யும்.

வெளிப்படையாக இலங்கை மீது எந்த நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கப்போவதில்லை. இராஜதந்திர ரீதியில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இவ்வாறு மோடி அரசாங்கத்தின் பிரதான கொள்கை வகுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'இந்தியா மோடியின் கீழ்' எனும் தொனிப் பொருளில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை மையமாக வைத்து, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றையதினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், பி.ஜே.பி. அரசின் முக்கிய கொள்கை வகுப்பாளர்களான, டாக்டர் சுப்பிரமணிய சுவாமி, டாக்டர் ஷேசாத்திரி சாரி, டாக்டர் சுரேஸ் பிரபு, சிவப்பன் ரகுப்தா, பேராசிரியர் வட்மா வலபட், ஆகியோர் கலந்து கொண்டனர்.


அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும் போது, இலங்கை விவகாரத்தை இந்தியா எவ்வாறு கவனிக்கின்றது என்பது தொடர்பாக விளக்கமளித்தனர்.

இலங்கையில் இன அழிப்பு

(19) பக்கம் பார்க்க...

## இலங்கையுடன் சிறந்த உறவை பேண விரும்புகிறார் மோடி

### ஜனாதிபதியிடம் இந்தியக் குழு தெரிவிப்பு



இலங்கையுடன் சிறந்த உறவுகளைப் பேணுவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மிகவும் ஆர்வத்துடன் உள்ளதாக இலங்கைக்கு வருகை தந்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சுப்பிரமணிய சாமி தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற 'மோடியின் கீழ் இந்தியா' எனும் தலைப்பில் உரையாற்ற வந்த சுப்பிரமணியசுவாமி தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாட்டு மற்றும் பிராந்திய உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கைக்கு இந்தியா தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் எனவும் தெரிவித்தனர்.

இறுதிக்கட்டப் போரின் பின்னர் இலங்கை அடைந்து வரும் முன்னேற்றம் குறித்தும் அவர்கள் தமது பாராட்டுதலைத் தெரிவித்தனர். பயங்கரவாதத்தை முற்றுமுழுதாக ஒழித்த ஒரே நாடு இலங்கையே என தூதுக் குழுவில் இடம்பெற்ற டாக்டர் இராமானுஜன் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் பாதுகாப்பு என்பது இந்தியாவிற்கு மிகவும் முக்கியமானது என ஜனாதிபதிக்குத் தெரிவித்த சுவாமி, இலங்கையில் போர் முடிவடைந்தமையானது இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பில் முன்னேற்றமான நடவடிக்கை எனவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொண்டு வரும் அடிப்படைக் கட்டுமானம், சிறந்த கல்வி

(19) பக்கம் பார்க்க...

## விசாரணைக்குழு இணைப்பாளரை சந்திக்கும் அழைப்பு நிராகரிப்பு

இலங்கையில் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரிக்கும் ஐ.நா. விசாரணைக் குழுவின், இணைப்பாளர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையாருக்கும், ஜெனிவா வில் உள்ள இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவுக்கும் இடையிலான சந்திப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பை, இலங்கை நிராகரித்துள்ளது..

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள, சன்ட்ரா பெய்டாசுக்கும் ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவுக்கும் இடையில் சந்திப்பை ஒழுங்கு செய்யுமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்

(19) பக்கம் பார்க்க...

## வடமாகாண ஆளுநராக பதவியேற்றார் சந்திரசிறி



வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மும்மதத் தலைவர்களின் ஆசீர்வாதங்களுடன் ஆளுநர் தனது இரண்டாவது பதவியேற்புக் காலத்தினைப் பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து, ஆளுநரும் அவரது

(19) பக்கம் பார்க்க...

## எழிலன் பிடித்த பிள்ளைகள் எங்கே? அனந்திக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இடம்பெற்று வரும் ஆட்கொணர்வு வழக்கு விசாரணைக்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் (எழிலன்) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு நேற்றைய தினம் சென்ற போது அங்கு அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் சந்தியிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தில் எழிலனால் பிடிக்கப்பட்ட தங்களது பிள்ளைகளுக்கு பதில் கூறு, உனது கணவனைத் தேடும் நீ எங்கள் பிள்ளைகளைத் தேடித்தருவாயா? போன்ற கோஷங்களை அனந்தியை நோக்கி எழுப்பினர்.

(19) பக்கம் பார்க்க...

## போரில் தோல்வி ஏற்படுமென பிரபாகரன் நினைக்கவில்லை

### கைதான புலி உறுப்பினர்கள் வாக்குமூலம்

வடக்கில் இடம்பெற்ற போரில் தோற்க நேரிடும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருபோதும் நினைக்க வில்லை என அண்மையில் மலேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளதாக ஐலண்ட் தெரிவித்துள்ளது.

வடக்குப் போரில் படுதோல்வியடைய நேரிடும் என பிரபாகரனோ அல்லது புலி உறுப்பினர்களோ கருதவில்லை.

போர் இடம்பெற்ற காலத்தில் நாம் கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க புறநகர்ப் பகுதிகளில்

(19) பக்கம் பார்க்க...

## பவள் மோதி பெண் படுகாயம்

### இராணுவ வீரரைக் கைது செய்யுமாறு பொலிஸாருடன் மக்கள் முறுகல்



(வவுனியா)

வவுனியா தினச்சந்தைக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இராணுவத்தின் பவள் கவச வாகனம் மோதியதில் பெண்ணொருவர் படுகாயமடைந்ததை அடுத்து பவள் வாகனத்தை செலுத்திய இராணுவத்தினரைக் கைது செய்யுமாறு தெரிவித்து பொது மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான சூழல் நிலவியது.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

விசேட அதிரடிப் படையினரின் பவள் கவச வாகனம் வீதியின் அருகே மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவரை மோதியதால் அவர் படுகாயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பெண்ணை மோதிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட இராணுவ பவள கவச வாகனத்தை வழிமறித்த பொதுமக்கள் விபத்துக்கு காரணமான இராணுவத்தினரைக் கைதுசெய்யக் கோரி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் சமரசம் செய்ய முயற்சித்தனர். எனினும் பொது

(19) பக்கம் பார்க்க...

உள்ளே
தரம் -5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வினாத்தாள்

# மணிக்கூட்டு கோபுர பகுதியில் மன்னர்களின் சிலை நிறுவ நடவடிக்கை

## யாழ். மாநகர முதல்வர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தினை ஆண்ட மூன்று மன்னர்களின் சிலைகளை மணிக்கூட்டு கோபுரத்தின் மூன்று மூலைகளிலும் வைப்பதற்கு உத்தேசித்துள்ளதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று தெரிவித்தார்.

யாழ். மணிக்கூட்டு கோபுரத்தினை சுற்றியுள்ள வளைவுகள் தற்போது யாழ். மநாகர சபையினால் இடிக்கப்பட்டு வருகின்றன.

குறித்த வளைவுகள் இடிக்கப்படுவதற்கான காரணம் குறித்து யாழ். மாநகர முதல்வரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ். நகரப்பகுதியில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. அதனடிப்படையில் யாழ். சமூகத்துடன் கலந்துரையாடிய போது, எமது வரலாற்று மன்னர்களின் சிலைகளை வைப்பதன் மூலம் வரலாற்று உண்மைகளை யாவருக்கும் காட்ட முடியும் என்ற நோக்கத்துடன் யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணத்தினை ஆண்ட மூன்று மன்னர்களின் சிலைகளை நிறுவதற்கான நடவடிக்கையினை எடுத்து வருகின்றதாகக் கூறினார்.

சிலைகள் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமியின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

# மரக்கறிகளின் விலை திடீர் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மரக்கறிகளின் விலை குடாநாட்டுச் சந்தைகளில் திடீரென குறைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக மிகவும் உயர்ந்த நிலையில் காணப்பட்ட மரக்கறிகள் தற்போது 50 ரூபாவைவிட குறைவாக விற்கப்படுகின்றன.

கடந்த சில நாட்களாக முருங்கைக்காய் 30 ரூபா தொடக்கம் 40 ரூபா வரையும், கத்தரிக்காய் 30 ரூபா தொடக்கம் 50 ரூபா வரையும், தேசிக்காய் ஒரு கிலோ 50 ரூபா வரையும், வெங்காயம் 40 ரூபா தொடக்கம் 60 ரூபா வரையும், கீரை ஒரு பிடி 5 ரூபா முதல் 10 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றது. (66)

# இலவசமாக நடத்தப்படவுள்ள உல்லாசத்துறை பாடநெறி

(யாழ்ப்பாணம்)

உல்லாசத்துறை விடுதிகள் தொடர்பான பாடநெறி பயிற்சியும் நடத்தப்படுவதுடன் சித்தியடைவோருக்கு உத்தரவாதத்துடன் நிரந்தர தொழில்வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மாலை 6.00 மணிக்கு வடமாகாண சுற்றுலாத்துறை தலைவர் திலகராஜ் தலைமையில் நடைபெற்றது.

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் முன்னெடுப்பில் வடமாகாண சபையின் ஜெட்விங் குழுமத்துடன் இணைந்து இலங்கை மற்றும் சர்வதேச உல்லாசத்துறை விடுதிகளில் நிரந்தர தொழில் வாய்ப்புக்களை வடமாகாண இளைஞர், யுவதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் பல நன்கொடை நிறுவனங்களின் அனுசரணையுடன் இலவசமாக அதியுயர் தரத்தில் பாடநெறியும் தொழில் பயிற்சியும் நடத்தப்படவுள்ளன.

இங்கு தேவைக்கும் தகுதிக்கும் முன்னுரிமை கொடுத்து புலமைப்பரிசில் மூலம் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.'

இப்பாடநெறியும் பயிற்சியுமானது 6 மாதகாலம் யாழ். நகரில் ஊக்குவிப்புத் தொகை, உணவு, தங்குமிட வசதிகளுடன் அதியுயர் நட்சத்திர விடுதிகளிலும் வழங்கப்படவுள்ளது. இதன் முடிவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களும் உத்தரவாதமாக வழங்கப்படும்.

இப்பாடநெறி செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இற்கான குறைந்தபட்ச விண்ணப்ப தகுதிகள் தரம் 8 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேறு தகுதிகளும் அனுபவங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இப்பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம், இல 124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்.பி)

# கட்டாக்காலி கால்நடைகளால் வீதிகளில் பயணிப்போர் அவலம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளால் வீதிகளில் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர். சில வேளைகளில் உயிராபத்தும் ஏற்படுகின்றது.

எனவே கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டாக்காலிகளாக திரியவிடாது வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (140)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் பீடத்தின் பாவனைக்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. வாகனத்தின் முதற்பதிவு 05 வருடங்களுக்கு மேற்படாமலும் வாகனத்தின் உற்பத்தி காலம் 07 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

வெற்றிபெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான் (14 அல்லது 15 ஆசனங்கள்) அல்லது அதற்கு மேல் | டீசல் (dual A/C) | 01 |

விண்ணப்பப் படிவம் மற்றும் விலை ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 06.08.2014 மதியம் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகக் கிளை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- ஐ பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வான் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி"** என அடையாளமிடப்பட்டு 11.08.2014 பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் **தலைவர், கேள்விச்சபை, த.பெ. எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம். அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 11.08.2014 அன்று பி.ப. 2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்,**
**கேள்விச்சபை**
**யாழ். பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**
**21.07.2014**

(C/3746)


## தந்தையும் மகளும் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் உசன் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகளும் காயமடைந்துள்ளனர்.

உசனைச் சர்ந்த தாமோதரம் பிள்ளை செல்வநாயகம் (வயது - 55), நிதுசா (வயது - 17) ஆகிய இருவருமே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டிப்பருடன் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (11)

## தோட்டங்களில் இரவு நேர திருட்டு

ஏழாலைப் பகுதியில் விவசாயத் தோட்டங்களில் தொடரும் திருட்டுக்களால் விவசாயிகள் நட்டமும் கவலையும் அடைந்துள்ளனர்.

அண்மைக்காலமாக ஏழாலை மத்தி வயல், தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்டு விளைந்துள்ள புடோல், வெங்காயம் என்பன திருடப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (66)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நல்லூர் பண்டாரமாளிகை முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து கொள்கின்றார்.

## தாக்குதலில் காயம்

(யாழ்ப்பாணம்)

வரணி கரம்பைக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் மூவரால் தாக்கப்பட்ட நிலையில் கணபதிப்பிள்ளை தேவச்சந்திரன் (வயது - 48) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (11)

# தெல்லிப்பளை வைத்தியசாலையில் மனநோயாளி சடலமாக மீட்பு

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை விடுதியினுள் மனநோய் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. காலையில் நித்திரைவிட்டெழுந்து நடமாடினார் எனவும் அதன் பின்னர் இவர் தற்கொலை செய்துகொணடுள்ளார் எனவும் வைத்தியசாலை அலுவலர்கள் தெரிவித்தனர்.

யன்னலில் தூக்கிட்ட நிலையில் இவர் சடலமாக மீட்கப்பட்டார். பாத்திமா கோயிலடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த பெ.தர்மசீலன் (வயது - 36) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

வைத்தியசாலை நிவர்கத்தினால் தெல்லிப்பளை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதவான் சடலத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலம், யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது.

# முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் முதியோர் சங்க அங்குரார்ப்பணம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பி.சிவதர்சினி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு உளவளத் துணை உத்தியோகத்தர் பி.கிருசாந்தி, கிராம அலுவலர் எஸ். டிலக்சினி ஆகியோரும் 60 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் சமுகம் கொடுத்திருந்தனர்.

இதில் முதியோர் சங்கத் தலைவராக அந்தோனிப்பிள்ளை யோசப், செயலாளராக சி.எம். றெல்சன், பொருளாளராக அ.பீற்றர்குமார் ஆகியோரும் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகத்தினராக மேலும் 9 பேர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். (27)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

***றீசைக்கிள் (மீள் சுழற்சி)***


அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

**இல.06 கனகசபை லேன்,**
**சிவலிங்கப்புளியடி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# எமது மாணவர்களிடம் தமிழ் வளர்க்கப்பட வேண்டும்

## யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இன்றைய சூழலில் தமிழ் மொழியினை மாணவர்களுக்கு வளர்க்க வேண்டிய தேவையுள்ளது. காரணம் க.பொ.த.சர்தாரணதரத்தில் 20 சதவீதமான மாணவர்கள் தமிழ் மொழியில் சித்தியடையத் தவறுகின்றார்கள் ஆனால் சிங்கள மொழியிலோ இது 9.9 வீதமாகக் காணப்படுகின்றது இந் நிலைமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா தெரிவித்தார்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் மொரட்டுவப் பல்கலைக்கழக தமிழ்மன்றத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற (தமிழருவி சொற்கனை 2014 ) விவாதச்சமரின் யாழ்.மாவட்ட மட்டப்பாடசாலைகளுக்கிடையிலான போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கான வாழ்த்துரையினை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழர்களுடைய அறிவு பெருமை பாடசாலைமட்டத்தில் குறைவடைந்து செல்கின்றது. என்ற கருத்து முன் வைக்கப்படுகின்றது. இக்கருத்தினை அடுத்து வருகின்ற காலங்களில் கல்வியின் ஊடாக முறியடிக்க வேண்டும்.

மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் விவாதச்சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்துகின்ற அதேவேளை கா.பொ.த.சாதாரண மாணவர்களுக்கு தமிழ்மொழி சார்ந்த பரீட்சை வழிகாட்டல்களையும் நடாத்தவேண்டும். க.பொ.த.சாதாரணதரத்தில் மாணவர்கள் ஏன் சித்தியடையவில்லை என்பதனை ஆய்வு செய்து எதிர்காலத்தில் இதற்கான வழிப்படுத்தல் செயற்றிட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்றார்.

இப்போட்டிக்கு விருந்தினர்களாகவும் நடுவர்களாகவும் பூநகரி பிரதேசசபைத்தவிசாளர் க.ஸ்ரீஸ்கந்தராஜா சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா யாழ்ப்பாணம் கம்பன் கழகத்தலைவர் லே.துஷிகரன் சட்டத்தரணிகளான பி.புரந்தனன் எஸ்.ரஞ்சித் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன் மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள் குமரன் மொபிட்டல் நிறுவன யாழ். பிராந்திய சிரேஸ்ட அதிகாரி ப.டிலான் ஆகியோர் கலந்து கொண்டதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிவைத்தனர். (63)

# காணிகளை துப்புரவு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு முறைப்பாடு

கீரிமலை, நகுலேஸ்வரம் ஆலய முன்றிலில் உள்ள தமது காணிகளைத் துப்புரவு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு தெரிவித்து காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் 11 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நகுலேஸ்வரம் ஆலய முன்றிலில் உள்ள காணிகளை மக்கள் நேற்று முன்தினம் துப்புரவு செய்வதற்கு முயற்சித்தபோது நகுலேஸ்வரம் உப பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் அதற்கு அனுமதி மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், தமது காணிகளைத் துப்புரவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்து மக்கள் காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் முன்னதாகவே அரசாங்கம் சுவீகரித்துள்ள காணிகளைத் துப்புரவு செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு தெரிவித்தே இந்த முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை



(மல்லாவி)

மல்லாவி மின்வாரிய வீதி நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதியால் பயணம் செய்வோர் பல விபத்துக்களை எதிர்நோக்குவதோடு வாகன சேதங்கள் உட்பட பண நஷ்ரங்களையும் எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்த வீதியைத் திருத்தித் தருமாறு பல அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என தெரிவித்த அவர்கள் தமக்கு இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (140)

# பொட்டு என்ற பொட்டம்மான் வைச்ச பொட்டு - 03






பொட்டம்மான் வைச்ச பொட்டைப் பற்றிப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சொன்ன கதையையும் இஞ்ச ஒருக்கால் சொல்லவேணும்.

**'அப்ப (1977 இல) தமிழீழத்தைப் பெற்றுத் தருவினம் எங்கட தமிழ்த்தலைவர்கள் எண்ட நம்பிக்கையிலயும் அவை சொன்ன சொல்லுக்கு மதிப்புக் குடுத்துமே தமிழ் இளைஞர்கள் தங்கட ரத்தத்தால இவைக்குப் பொட்டு வைச்சவை. அப்பிடி வீரத்திலகத்தை வெற்றிப் பெருமிதத்தோட வாங்கித் தேர்தலில வெற்றி வாகை சூடிப்போட்டு, 'அரசாங்கம் ஏமாத்துது. ஒண்டையும் செய்றதுக்கு அரசாங்கம் விடுகுதில்லை' எண்ட நொண்டிச் சாட்டுச் சொல்லிறதுக்கு ஒரு தலைமை தமிழர்களுக்குத் தேவையில்லை. அப்பிடிச் சொல்லிக் கொண்டே பாராளுமன்றச் சம்பளத்தை எடுக்கிறதுக்கும் ஊர் சுத்திக்கொண்டிருக்கிறதுக்கும் நாங்கள் (தமிழ் இளைஞர்கள்) ஒண்டும் இளிச்சவாயர்கள் இல்லை. அதாலதான் நாங்கள் மற்றப் பொட்டை (மண்டையில் போடுறது) வைச்சனாங்கள். அதையும் யோகேஸ்வரனுக்கும் அமீர்தலிங்கத்துக்கும் ரத்தப்பொட்டு வைச்ச பொட்டுவைக்கொண்டே இந்தப் பொட்டை வைச்சனாங்கள். தமிழ் மக்களை ஏமாத்திற அரசாங்கத்தை எப்பிடி எதிர்த்தமோ அப்பிடித்தான் தமிழ்மக்களை ஏமாற்றின தமிழ்த்தலைவர்களையும் நாங்கள் எதிர்க்கோனும்'** எண்டு பிரபாகரன் அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் போட்டுத்தள்ளினதுக்குப் பிறகு தன்ரை சக உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறார்.

அப்பிடியெண்டால்......?

வரலாறு மீண்டும் ஒருக்கால் திரும்பி வரத்தான் போகுதோ...!

இதைத்தான் 'யானை படுத்திட்டுது. இனி எழ மாட்டாது' எண்டு பூடகமாக 'புலி படுத்திட்டுது. இனி எழமாட்டுது' எண்டு தன்ரை வாயாலயே சொல்லியிருக்கிறாரோ....!

பிரபாகரனின்ரை புலி படுத்தாலும் இப்ப கூட்டமைப்புக்கு ஆதரவாக – கூட்டமைப்புக்காரன் சொல்லிறதையெல்லாம் அப்பிடியே பச்சையாக நம்பிக்கொண்டிருக்கிற பெடியள், நிச்சயமாக நாளைக்குச் சும்மா படுத்திருக்கப்போறதில்லை.

தாங்கள் நம்பியவர்களே தங்களை ஏமாத்திக்கொண்டிருக்கினம் எண்ட உண்மை கசப்பாகத் தெரியத் தொடங்க, அத்தினை கோவமும் இவையில (கூட்டமைப்புக்காரருக்கு மேல) தான் வரும்.

எடுத்ததுக்கெல்லாம் அரசாங்கத்தைக் குறைசொல்லி, குற்றம்சாட்டிப் போட்டுத் தாங்கள் மட்டும் சலுகைகளைத் தாராளமாக அனுபவிக்கிற இந்தப் போக்கிரித்தனத்தைப் பெடியள் ஒருநாளும் பொறுத்துக்கொள்ள மாட்டாங்கள்.

இப்பவே அவனவன் கூட்டமைப்புக்காறற்றை போலித்தனங்களைப் பற்றிச் சந்தியிலயும் தெருவிலயும் நிண்டு கதைக்கத் தொடங்கீட்டான்கள்.

அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டிறது... இல்லாட்டிக்கு சர்வதேச சமூகத்தைத் துணைக்கு கூப்பிடுறது... இதோட இலங்கைக்கு ஆர் வருகினம் எண்டு பார்த்துக்கொண்டிருந்து.... வாற போறவையிட்ட பிலாக்கணம் வைக்கிறது...

இதுதான் தமிழ்ச் சனத்துக்குச் செய்யிற அரசியல் தொண்டோ....

முப்பது முப்பத்தைஞ்சு வருசமாகப் போரில கிடந்து துவண்ட சனங்களுக்கு எவ்வளவு காரியங்கள் செய்யக் கிடக்கு....

அரசாங்கம் றோட்டைப் போட்டுது, குளங்களைத் திருத்திச்சிது. கட்டிடங்களைக் கட்டிக்குடுத்துது.... பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் எல்லாத்தையும் ஒழுங்காக இயங்க வைக்கிது. மின்சாரத்தைக் குடுத்திருக்கு... சனங்களுக்கு வீடுகளைக் கூடக் கட்டிக் குடுத்திருக்கு....

இதுக்கு மேல இனிச் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் இவைக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரருக்கு)த் தானே இருக்கு.

இவை மாகாணசபையில ஆயிரத்தெட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதைப்பற்றிப் பேப்பரில போட்டுச் சனங்களுக்குப் பேய்க்காட்டுகினம்.

இந்தத் தீர்மானங்கள் எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான் எண்டதைச் சனங்கள் இப்ப விளங்கத் தொடங்கீட்டினம்.

சனங்களுக்கு விசயம் விளங்கத் தொடங்கினால்.... சுத்துமாத்துக்காரருக்கு வில்லங்கம்தான்.

படுத்திருக்கிற இந்த யானைக் கூட்டம் (சனக்கூட்டம்) விழித்தெழும்பினால்....?

காதில பூவைக்கிற கூட்டமைப்புக் கூட்டத்துக்கு ஆப்புத்தான். ஆபத்துத்தான்.

வெள்ளி திசையும் கொஞ்சக்காலந்தான் தம்பி. இப்ப இவைக்கு (கூட்டமைப்புக்காரருக்கு) அந்த வெள்ளிதிசை அடிக்கலாம்.

ஆனால், இது கனகாலத்துக்கில்லை. பிறகு ஏழரைச்சனியன்.... பிடிக்கப்போகுது.

அப்பதான் 'பொட்டம்மான் என்ற பொட்டு வைச்ச பொட்டு'வைப் பற்றித் தெரியும்.

வரலாறு ஒண்டும் பிழையாகக் கணக்குப் போடுறதில்லை...

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தர்ய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும். - சீனப் பழமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மூன்று வெள்ளைப் பிசாசுகள்!

நம்மில் பலர் காலை எழுந்தவுடன் தேநீரோ கோப்பியோ குடிக்க வேண்டும் என்ற பழக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். சோர்வாக இருக்கும்போது அல்லது சாப்பாட்டு நேரம் அல்லாத போது வயிற்றில் பசியுணர்வு ஏற்பட்டால் 'ஒரு தேத்தண்ணி குடித்தால் நல்லது' என்று நினைக்கிறோம்.

அடிக்கடி 'ரீ குடிக்கலாம் வா' என்று கேட்பவர்களை, அந்தந்த நேரத்திற்கு ரீ குடிக்காவிட்டால் எதையோ பறிகொடுத்தவர்கள் போல் இருப்பவர்களை, ரீ–கோப்பிக்கு அடிமைகள் என நினைக்கிறோம்.

ஆனால் உண்மையில் நாம் சீனிக்குத்தான் அடிமைகள் என்கிறார்கள் இயற்கை மருத்துவர்கள். உலக மக்களில் பெரும்பாலானவர்கள் சீனி அடிமைகளே. நாம் தேநீர் மற்றும் கோப்பி வடிவில் என்றால், மேலைநாட்டில் ஐஸ்கிரீம், சொக்ளேற் வடிவில் அதிகமாக உண்கிறார்கள்.

சீனியில் எந்தச் சத்தும் இல்லை, விஷத்தன்மையே இருப்பதாக விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டறிந்து சொல்லியுள்ளனர். சிகரெட், மது முதலியவற்றைவிட சீனி அதிக ஆபத்தானது என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சீனி சேர்க்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் உடல் எடை அதிகரித்தல், இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், புற்றுநோய் மற்றும் ஈரல் தொடர்பான நோய்களுக்குக் காரணமாக அமைவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 35 மில்லியன் மரணங்களுக்கு சீனி காரணமாக அமைவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனி நம்மை களைப்படையச் செய்கிறது. இரத்த அழுத்தம், பதற்றம், உடற்பருமன் அதிகரிப்புக்கும் அதனாலுண்டாகும் பல்வேறு நோய்களுக்கும் சீனியே பிரதான காரணமாக உள்ளது.

மனிதன் அதிகம் உண்ணும் சத்தில்லாத உணவுகளில் சீனியும் ஒன்று. உண்மையில் நம்முடைய உடலுக்கு சீனி அறவே தேவையில்லை என்று சொல்லப்படுகிறது. இனிப்புக்கு வெல்லம், பனைவெல்லம் ஆகியவையே ஏற்றவை. இவை வயிற்றில் மெல்ல மெல்ல செரிமானமாகின்றன. ஆனால் சீனி உடனடியாக குருதியில் கலக்கிறது.

மூன்று வெள்ளைப் பிசாசுகளை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் என்கிறது இயற்கை மருத்துவம். அவை சீனி, உப்பு, பால். இன்றைய மனிதனின் பெரும்பாலான நோய்களுக்குக் காரணம் இவையே.

சீனி நம் இரத்தத்தில் செயற்கையான ஒரு உபரி சக்தியாக, சுமையாக மாறுகிறது. உடலில் சீனி குறையும்போது உடனே சீனி தேவை என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. மறுகணமே தேநீரோ கோப்பியோ குடிக்கிறோம்.

உப்பு மிகக் குறைவாகவே உடலுக்குள் செல்ல வேண்டும். அதிகமாகச் செல்லும் உப்பு உடலின் திரவங்களை எடைமிக்கதாக ஆக்குகிறது. கழிவுறுப்புகளை அழிக்கிறது. நொறுக்குத்தீனிகள் வழியாகவே அதிக உப்பு உடலில் சேர்கிறது. அவற்றை தவிர்க்க வேண்டும்.

பாலை குறைத்தால் பெரும்பாலான வயிற்றுச் சிக்கல்கள் உடனடியாக இல்லாமலாவதை எவருமே உணரலாம். பாலும் சீனியும் வயிற்றிற்குள் சென்றதுமே புளிக்கின்றன. அமிலமாக ஆகின்றன. அவை நம் உடலுக்கு பெரும் தீங்கு விளைவிப்பவை என்கின்றன இன்றைய ஆய்வுகள்.

மது, சிகரெட் ஆகியவற்றுக்கு கட்டுப்பாடுகள் விதித்துச் சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பது போல, சீனிப் பாவனைக்கும் தடை செய்யும் சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள் உலக விஞ்ஞானிகள்.

சிகரெட் பிரியர்கள் திருட்டுத்தம் அடிப்பதுபோல சீனிப் பிரியர்கள் திருட்டுத்தனமாக தேநீர் குடிக்க வேண்டிய காலம் வரப் போகிறது!

- ஆசிரியர்.

# இலங்கைக்கு எதிரான விசாரணை
# இந்தியா உட்பட 5 நாடுகள் எதிர்ப்பு

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் முன்னெடுத்துள்ள விசாரணைக்கு ஐந்து நாடுகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய தெற்காசிய நாடுகளே இந்த விசாரணைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஐ.நா. விசாரணைக்குழு தமது நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கான விசாவை வழங்க இந்தியா மறுத்துள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

நாடொன்றை தனிமையாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைக்கு குறித்த நாடுகள் ஒத்துழைப்பு வழங்க மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு எதிரான விசாரணைகளுக்காக 13 பேர் கொண்ட குழுவையும் மூவர் அடங்கிய நிபுணர் குழுவையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நியமித்துள்ளது.

இந்த விசாரணைகளுக்காக இலங்கைக்கும் அயல்நாடுகள் சிலவற்றுக்கும் செல்வதற்கு ஐ.நா. குழு திட்டமிட்டிருந்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசாரணைகளுக்காக இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாமற்போகும் பட்சத்தில் இந்தியாவிலிருந்தேனும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஐ.நா. குழு எதிர்பார்த்திருந்ததாக மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.

குறிப்பாக ஆப்கானிஸ்தானும இலங்கை தொடர்பான விசாரணைக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையின்போது ஐ.நா. குழுவினர் ஸ்கைப் மற்றும் ரெலி கொன்பரன்ஸ் ஆகியவற்றை பயன்படுத்தி சாட்சியங்களை திரட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை அல்லது அதன் அயல்நாடுகளுக்கு வருகைதரும் ஐ.நா. குழுவின் பிரதான நோக்கம் நிறைவேறாத நிலையில் அவர்கள் ஆசியாவிற்கு வெளியேயிருந்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஐ.நா. குழு தற்போது ஒஸ்லோ, ரொரென்டோ மற்றும் லண்டன் ஆகிய நகரங்களில் இருந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மன்னார் புனித சவேரியார் முன் பழைய மாணவர்கள் போராட்டம்

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலைக்கு முன்பாக பெற்றோரும் பழைய மாணவர்களும் நேற்று முற்பகல் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஆயிரத்து 825 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் இதுவரை காலமும் அருட்சகோதரர்களும், அருட்தந்தைகளுமே அதிபர்களாக செயற்பட்டு வந்ததாகவும் இம்முறை இது வரைகாலமும் இருந்த நடைமுறைக்கு மாறாக புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசா லைக்கு முன்பாக அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொண்டவர்கள் கூறினர்.

எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்த பழைய மாணவர்களும், பெற்றோரும் நேற்று முற்பகல் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மன்னார் வலயக் கல்விப் பணிமனையில் கையளித்துள்ளனர்.

## உயிர்காக்கும் அங்கிகள் கட்டம் கட்டமாக விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கவென யாழ்.எடுத்து வரப்பட்ட உயிர் காப்பு அங்கிகள் மற்றும் வலைத்தொகுதிகள் கட்டம் கட்டமாக விநியோகிக்கப்படவிருப்பதாக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

முதற்கட்ட விநியோகத்திற்குரிய 300 கடற்றொழிலாளர்களின் பெயர் விபரங்கள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டு அந்தப் பெறுமதிக்கேற்ப உயிர்காப்பு அங்கிகள் மற்றும் வலை முதலிய பொருட்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## போலிப் பெயருடன் இருந்த இந்தியப் பிரஜைக்கு மறியல்

(கொழும்பு)

விசா இல்லாமல் 19 வருடங்கள் போலிப் பெயருடன் இலங்கையில் தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜையை எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் பொருட்டு இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை சட்ட மா அதிபருக்கு அனுப்புமாறும் அநுராதபுரம் நீதவான் பொலிஸாருக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்தார்.

இவர் அடிக்கடி இந்தியாவுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சென்று வந்தமைக்கான ஆதாரங்களை பொலிஸார் நீதிமன்றில் முன் வைத்தனர்.

## அடையாள பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

நிலுவை வேதன கொடுப்பனவு உள்ளிட்ட 5 கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றிணைந்த தொழிற்சங்க அமைப்பு நாடளாவிய ரீதியாக உள்ள மருத்துவமனைகளில் அடையாள பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை மேற்கொண்டது.

நேற்றுக் காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையிலும் இந்த அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

தமது இந்த பணிப்புறக்கணிப்புக்கு மருத்துவம் தொடர்பான 27 துறைகளைச் சேர்ந்தவர்களும் இணைந்து கொண்டதாக சங்கத்தின் இணைப்பாளர் பி.எச். சோமரத்ன தெரிவித்தார். இந்த நிலையில், தமது கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கப்பெறாத பட்சத்தில் எதிர்வரும் காலத்தில் பாரிய தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 21 இலட்சம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கு பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முனைக் கடற்பகுதியில் மீனவர் ஒருவர் பிடித்து வைத்திருந்த சுமார் 21 இலட்சம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கு வைத்திருந்த குற்றத்திற்காக யாழ்.பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை இரவு குறித்த வலம்புரிச் சங்கு வைத்திருந்த மீனவர் பிடிக்கப்பட்டு அவரிடம் இருந்த வலம்புரிச் சங்கு பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, அனுமதிப்பத்திரம் இல்லாது குறித்த வலம்புரிச்சங்கை வைத்திருந்த மீனவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# "பெரும்பான்மைத் தமிழர்களின் ஆதரவைப் பெற்றிருந்த புலிகளைப் போன்று பெரும்பான்மை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இஸ்லாமிய அமைப்பெதுவும் தமிழர்களின் மீதான தாக்குதல்களுக்கு காரணமாக இருக்கவில்லை"

**ஏறாவூரைச் சேர்ந்த எழுத்தாளரும் சமூகச் செயற்பாட்டாளருமாகிய ஸர்மிளா ஸெய்யித் எழுத்தாளர் ஷோபா சக்திக்கு வழங்கிய நேர்காணலில் ஒரு பகுதி:**



**அளுத்கம - பேருவளை கொலைகளும் தாக்குதல்களும் வரலாற்றில் இனியும் தொடருவதற்கான வாய்ப்புகளுள்ளன என கருதுகிறீர்களா? இந்தத் தாக்குதல் வெறுமனே 'பொதுபலசேனா'வினது முன்னெடுப்பு மட்டுமல்ல, இதற்குப் பின்னால் இலங்கை அரசின் கைகள் இருக்கின்றன எனச் சொல்லப்படும் கருத்துகள் குறித்து?**

அளுத்கம - பேருவளை தாக்குதல்களும் கொலைகளும் ஒரு கட்டம் (Episode) நிறைவேறி முடிந்திருக்கிற உணர்வையே தருகின்றன. வரலாற்றில் சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்கள் 1956, 1958, 1977, 1981, 1983 காலப்பகுதிகளிலும் அதன் பின்பு யுத்த காலத்தில் குறுகிய கால இடைவெளிகளில் ஏராளமாகவும் 2009இல் மிகப்பெரிய அவலங்களாகவும் நிகழ்த்தப்பட்டுள்ளன. இதுபோன்றே முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களும் கட்டம் கட்டமாக நிகழ்த்தப்படலாம்.

"பொதுபலசேனா" ஒரு கொந்துராத்து அமைப்பு, வழங்குநர் வேறு என்ற புரிதலே இலங்கை புத்திஜீவிகள் மத்தியில் நிலவுகின்றது. அது இலங்கை அரசின் கையாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். வெளிநாட்டு சக்திகளின் செல்வாக்காகவும் இருக்கலாம். வன்முறையைத் தடுக்கத் தவறியது, சட்ட ஒழுங்கைப் பேணாதது என்ற அடிப்படையில் முதல் குற்றவாளி அரசே என்பது நிரூபணத்திற்குரியது.

1983இல் நிகழ்ந்த இன வன்செயல்களுக்குக் காரணியாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் இருந்தது என்கின்ற பழி வரலாற்றுக் கறையாக இன்றுவரைக்கும் எப்படி அழியாதுள்ளதோ, அதேபோல மகிந்த ராஜபக்ச அரசும் கறைகள் நிரம்பிய வரலாற்றையே விட்டுச் செல்லும்.

**'இருட்டை இருட்டால் விலக்குதல்' என்ற கட்டுரையில் நீங்கள் 'இலங்கை சிங்கள பவுத்த நாடு என்கின்ற அடிப்படையை ஏற்றுக்கொண்டு தமது கௌரவத்தை பேணிய வகையில் அமைதியாக வாழ்வதா அல்லது அடையாளத்தை முன்னிறுத்தும் சண்டையில் அனைத்தையும் இழந்து அழிந்துபோவதா என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு இஸ்லாமியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதன் கருத்து இலங்கை சிங்கள பவுத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் மட்டுமே சிறுபான்மை இனங்களுக்கு கௌரவமும் அமைதியும் கிட்டும் என்பதா?**

இல்லை. இலங்கை சிங்கள பௌத்த பெரும்பான்மை நாடு என்பது வேறு. இலங்கையில் சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள் என்பது வேறு. முன்னையது பாசிஷக் குறியீடு. பின்னையது எதார்த்தம். எதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதையே அந்தக் கட்டுரையில் வலியுறுத்தியிருந்தேன்.

எதார்த்தத்தைப் புரிந்துகொண்டு சிறுபான்மையினர் தங்கள் அபிலாஷைகளையும் - தாங்கள் புறக்கணிக்கப்படுவதையும் பெரும்பான்மையினரிடம் எடுத்துச் சென்று நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். புதிய உலக ஒழுங்கில் புதிய அணுகுமுறைகளும் தேவை என்பதையே அந்தக் கட்டுரையில் உணர்த்தியிருந்தேன்.

**தமிழ் சனநாயகவாதிகள் என்போர் இரண்டு பிரிவினர். ஒரு பிரிவு இடதுசாரிகள். மற்றைய பிரிவு புலிகளுக்கு எதிரான தமிழ்த் தேசியவாதிகள். இஸ்லாமியர்கள் மீதான புலிகளின் வன்முறைகள் குறித்த விவகாரத்தில் முதல் பிரிவினர் பெரும்பாலும் மௌனமாகவே இருந்தார்கள். இரண்டாவது பிரிவினர் புலிகளின் ஜனநாயக விரோதச் செயல்களை அம்பலப்படுத்தவே இஸ்லாமியர் மீதான வன்முறைகளைக் கண்டித்தார்கள்.**

## ஸர்மிளா ஸெய்யித்

வன்முறைகளுக்கூடாக அடைந்து கொள்ளும் வழிமுறைகள் அழிவுகளை உண்டாக்குமே தவிர ஒரு போதும் விடுதலையை, அமைதியைக் கொண்டுவராது.

இலங்கையில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் அரசியலினூடாக அடையவேண்டிய இலக்குளை அடையாள ஆதிக்கத்தினூடாக அடைய முற்படுகின்ற முரண்பாட்டையே "இருட்டை இருட்டால் விலக்குதல்" கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

"இருட்டை இருட்டால் விலக்குதல்" என்பது, "கொலைக்குக் கொலை" என்ற நிலைப்பாட்டையும், அத்தகைய நிலைப்பாடு இனங்களுக்கிடையில் அமைதியை ஒருபோதும் கொண்டு வராது என்பதையும் சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்பட்டதே.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கான பிரதான காரணம் மேலாதிக்க மனோபாவமே. இந்த மனோபாவம் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் அனைவருக்கும் இருக்கிறது. இனமுரண்பாட்டின் அடிப்படை இழையாக இதுவே அமைகின்றது. இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு உருவாக மேலாதிக்க உணர்வு களையப்படவேண்டும். மேலாதிக்க உணர்வு அழியும்போதே சமத்துவம் உருவாகமுடியும்.

**தமிழக படைப்பாளிகளோடு உங்களுக்கு நெருங்கிய தொடர்புகளுண்டு. ஈழப்போராட்டம் குறித்தும் விடுதலைப் புலிகள் குறித்தும் தமிழக அறிவுத்துறையில் நிலவும் மதிப்பீடுகளை எவ்விதம் நீங்கள் மதிப்பிடுகிறீர்கள்?**

தமிழக படைப்பாளிகளுடனான எனது தொடர்புகள் இலக்கியம் சார்ந்தவை மட்டுமே. தமிழக அறிவுத்துறையில் விடுதலைப் புலிகள் குறித்தும் ஈழப்போராட்டம் குறித்தும் இருக்கக்கூடிய அரசியல் தெளிவு பெரும்பாலும் புலிகளால் அல்லது புலிகள் சார்பானவர்களால் பரப்புச் செய்யப்பட்டது. ஆகவே, அது ஒருபக்கச் சார்பானது. தமிழ்நாட்டின் அரசியல் சதுரங்கத்தில் ஈழப்போராட்டம் நகர்த்தப்படுகின்ற ஒரு காய்.

**தமிழகத்தைப் பொறுத்தளவில் முஸ்லிம்கள் தங்களைத் தமிழர்களாகவே கருதிக்கொள்கிறார்கள், ஆனால் இலங்கையில் முஸ்லிம்கள் தங்களைத் தனி இனமாக நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேறு பாட்டிற்கான அடிப்படைக் காரணங்களாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

தமிழக முஸ்லிம்களையும் இலங்கை முஸ்லிம்களையும் பொருத்திப் பார்ப்பதே ஒருவித முரண் அரசியல் நோக்கு என்பதே எனது அபிப்பிராயம்.

அரசியல், கலாசாரம் ஆகிய இரு பெருங் கூறுகள் இலங்கை முஸ்லிம்களையும் தமிழக முஸ்லிம்களையும் வேறுபடுத்தப் போதுமானவை. முதலாவதாக, இலங்கை முஸ்லிம்களைப் போன்று தமிழக முஸ்லிம்கள் சக இனத்தின் பாசிஷ சக்தியொன்றின் அடக்குமுறைக்கும் இன அழிப்புக்கும் ஆளாகியவர்களில்லை. புலிகளின் தனி ஈழக் கோரிக்கையும், ஜனநாயக விரோதப் போராட்டமும், முஸ்லிம்களை இலக்குவைத்து அழித்ததுமே முஸ்லிம்கள் அடையாள அரசியல் செய்யவும், தங்களைத் தனி இனமாக நிறுத்திக் கொள்ளவும் காரணங்களாகின.

கலாசாரம், இரண்டாவது. தமிழக முஸ்லிம்களின் கலாசாரம் இந்து சமூகத்தின் நீட்சியாகப் பார்க்கக்கூடியது. இலங்கை முஸ்லிம்களின் கலாசாரமும் இந்து மற்றும் பௌத்தர்களின் வாழ்வியலுடன் கலந்ததாக இருந்த போதிலும் இஸ்லாமியர்களுக்கே உரிய தனித்துவமான நாகரீகமாக அது மேம்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு, தமிழகத்து முஸ்லிம் பெண்களைப் போன்று இலங்கை முஸ்லிம் பெண்கள் கூந்தலில் பூக்களைச் சூடுவதில்லை. பூக்கள் சூடுவது இஸ்லாமியக் கலாசாரம் இல்லை.

**இஸ்லாமியர்கள் மீது தமிழர்கள் இழைத்த வன்முறைகளை தமிழ் சனநாயகவாதிகள் கண்டிப்பதுபோல, தமிழர்கள் மீது இஸ்லாமியர்களால் நடத்தப்பட்ட வன்முறைகளையும் கொலைகளையும் இஸ்லாமியத் தரப்பிலிருந்து அவ்வளவாக யாரும் கண்டிக்கவில்லை என்றொரு குற்றச்சாட்டு தொடர்ந்து தமிழர்கள் தரப்பிலிருந்து சொல்லப்பட்டு வருகிறதே?**

இஸ்லாமியர்கள் மீது தமிழர்கள் இழைத்த வன்முறைகளை தமிழ் சனநாயகவாதிகள் கண்டித்தார்கள் என்பது உண்மையே. ஆனால் இஸ்லாமியர்களை, பாதிக்கப்பட்ட ஓர் இனத்தவரை ஆற்றுப்படுத்தும் நோக்கில் அவர்கள் அதனைச் செய்யவில்லை என்பதும் உண்மை.

அதாவது நீங்கள் குறிப்பிடுகின்ற தமிழ் சனநாயகவாதிகள் என்போர் இரண்டு பிரிவினர். ஒரு பிரிவு இடதுசாரிகள். மற்றைய பிரிவு புலிகளுக்கு எதிரான தமிழ்த் தேசியவாதிகள். இஸ்லாமியர்கள் மீதான புலிகளின் வன்முறைகள் குறித்த விவகாரத்தில் நான் குறிப்பிட்ட முதல் பிரிவினர் பெரும்பாலும் மௌனமாகவே இருந்தார்கள். இரண்டாவது பிரிவினர் புலிகளின் ஜனநாயக விரோதச் செயல்களை அம்பலப்படுத்தவே இஸ்லாமியர் மீதான வன்முறைகளைக் கண்டித்தார்கள்.

**செருப்படியான பதில் கொடுத்திருக்கிறீர்கள். இஸ்லாமியர்களின் தரப்பிலிருந்து தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகளுக்கும் கொலைகளுக்கும் இஸ்லாமியத் தரப்புகளிடமிருந்து வலுவான கண்டனக் குரல்கள் எழாததற்கான காரணங்கள் எவையெனக் கருதுகிறீர்கள். இஸ்லாமிய முற்போக்காளர்களிடையே கூட கடுமையான தமிழின வெறுப்பு மேலோங்கியிருப்பதாக இதை எடுத்துக்கொள்ளலாமா?**

தமிழர்கள் மீதான வெறுப்பல்ல அது. தமிழர்கள் மீது தாக்குதல்களை நிகழ்த்தியது அரச படைகளுடன் சேர்ந்திருந்த சில முஸ்லிம் நபர்களே! பெரும்பான்மைத் தமிழர்களின் ஆதரவைப் பெற்றிருந்த புலிகளைப் போன்று பெரும்பான்மை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இஸ்லாமிய அமைப்பெதுவும் தமிழர்களின் மீதான தாக்குதல்களுக்குக் காரணமாக இருக்கவில்லை. அரச படைகளுடன் சேர்ந்து இயங்கிய முஸ்லிம் நபர்களின் தாக்குதல் அரசின் தாக்குதலே என்ற புரிதலே இஸ்லாமிய முற்போக்காளர்களிடமிருந்து வலுவான கண்டனக் குரல்கள் எழாததற்கான காரணம் என்று நினைக்கிறேன்.

**முஸ்லீம்கள் மீது புலிகள் இழைத்த கொடுமைகளுக்கெல்லாம் அவர்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுவிட்டார்கள், முஸ்லீம் தலைவர்களை வன்னிக்கு அழைத்துப் பேசினார்கள் என்றொரு வாதம் சொல்லப்படுகிறது.. அதை நீங்கள் எப்படி எடுத்துக்கொள்கிறீர்கள்?**

புலிகள் மன்னிப்புக் கேட்டார்கள் என்பது உண்மைதான். மனம் வருந்தி, தவறை உணர்ந்து இதயபூர்வமாக அவர்கள் அதனைச் செய்யவில்லை. முஸ்லிம் தலைவர்களை வன்னிக்கு அழைத்துப் பேசியதும் மன்னிப்புக் கேட்டதுமெல்லாம் அப்போதிருந்த அரசியல் சூழ்நிலையைத் தற்காலிகமாக கையாளுவதற்கே!

சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசும், புலிகளும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த தருணத்தில் தாங்கள் வரலாற்றில் இழைத்த தவறுகளிலிருந்து தப்பிக்கின்ற தந்திரோபாயமாகவே புலிகளின் இவ்விரண்டு செயல்களையும் நோக்க முடியும்.

இவ்விரண்டும் உண்மையானவையாக, இதயசுத்தியானவையாக இருந்திருந்தால் மாவிலாறில் தொடங்கிய இறுதிக்கட்ட யுத்தத்தின்போது புலிகள், மூதூர் முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றித் துடைத்தெறிந்த சம்பவம் நிகழ்ந்திருக்காது.

**இலங்கையில் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே இனி அரசியல் ஒருமைப்பாடு வரவே வராதா?**

தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையில் அரசியல் ஒருமைப்பாடு உருவாகுவதற்கான வழிகளொன்றும் இலங்கையில் இனி இல்லை என்பதே உண்மை. தமிழர் - இஸ்லாமியர் ஒருமைப்பாடென்பது சிங்களவர்களுக்கு எதிரான ஒருமைப்பாடாகவும் இருக்கக் கூடியது. அது ஆபத்தானது.

**புலிகள் முஸ்லிம் தலைவர்களை வன்னிக்கு அழைத்துப் பேசியதும் மன்னிப்புக் கேட்டதும் உண்மையானவையாக, இதயசுத்தியானவையாக இருந்திருந்தால் மாவிலாறில் தொடங்கிய இறுதிக்கட்ட யுத்தத்தின்போது புலிகள், மூதூர் முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றித் துடைத்தெறிந்த சம்பவம் நிகழ்ந்திருக்காது.**

## – இறுதிக்கட்ட போர் மீறல்கள் –

# ஜனாதிபதி ஆணைக்குழு முன்னும் சாட்சியமளிப்பதற்கு ஏற்பாடு

இறுதிக் கட்டப் போரின் போது இடம்பெற்றதாக கூறப் படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபி மானச் சட்ட மீறல்கள் தொடர்பில், காணாமற் போனோர் ஆணைக்குழு முன் பாக எவரும் சாட்சியமளிக்க முடியும் என்று ஆணைக்குழு வின் உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

காணாமற்போனோரின் உற வுகள் மாத்திரமே ஆணைக்குழு முன்பாக இந்த விடயங்கள் தொடர்பில் சாட்சியமளிக்க வேண் டியதில்லை என்றும் அந்த உயர் அதிகாரி குறிப்பிட்டார். காணா மற்போனோர் தொடர்பில் விசா ரணை மேற்கொள்ளும் ஜனாதி பதி ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்கள் கடந்த 15 ஆம் திக தியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விரிவாக்கப் பட்டுள்ளன. புதிய விடயப் பரப் புக்கள் மூலம், இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல் கள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பிலும் விசா ரணை மேற்கொள்ளுமாறு ஜனா திபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆனால் காணாமற்போனோர ஆணைக்குழுவுக்கு இதுவரை யில், காணாமற் போனோரின் உறவினர்கள் மாத்திரமே விண் ணப்பித்து சாட்சியமளிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந் தன. ஏனையோர் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளிப்பதற் குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டி ருக்கவில்லை. விரிவாக்கப்பட்ட புதிய விடயப்பரப்புக்கும், காணா மற்போனோரின் உறவினர் மாத் திரமா சாட்சியமளிக்க முடியும் என்ற வினாவிற்கு ஆணைக்குழு வின் உயர் அதிகாரி பதில ளிக்கையில் புதிய விடயப் பரப்பு போரின் போதான மீறல் கள் குறித்து விசாரணை செய் யுமாறு பணித்துள்ளது.

அதனடிப்படையில் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற சம் பவங்கள் விசாரணை செய்யப்பட வுள்ளன.இதன்போது காணாமற் போனோரின் உறவினர்கள் தவிர்ந்த, எவரும் சாட்சியம ளிக்க முடியும். இந்த மீறல்கள் தொடர்பில், எமது ஆணைக்குழு வுக்கு எழுத்து மூலமும் அனுப் பிவைக்க முடியும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

## கமராக்களிடம் இருந்து பாதுகாப்பு; சிறைச்சாலை அதிகாரிகள் மீது விசாரணை



தங்காலை பிரதேச சபைத் தலைவர் சம்பத் விதான பத்தி ரனவை, ஊடகவியலாளர்களின் கமராக்களிலிருந்து பாதுகாக்க முயற்சித்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குறித்து விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் தனது உத்தியோகபூர்வ தொப்பியை கழற்றி, பிரதேச சபைத் தலைவரின் முகத்தை மூட முயற்சித்துள்ளார்.

குராம் சேய்க் கொலையுடன் தொடர்புடைய குற்றச் செயலுக் காக சம்பத் விதான பத்திரனவிற்கு 20 ஆண்டு கால கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை அறிவிக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தை விட்டு வெளியேறி சிறைச்சாலைக்குச் செல்ல முயற்சித்த போது இவ்வாறு ஊடகவியலாளர்கள் புகைப்படம் எடுப்பதனையும், காணொளிகளை பதிவு செய்வதனையும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தடுத்துள்ள னர்.ஒரு உத்தியோகத்தர் மட்டுமன்றி கடமையில் ஈடுபட்ட ஐந்து பேரும் பிரதேசசபைத் தலைவரை புகைப்படம் எடுப்பதனை தடுக்க முயற்சித்தனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜீ.பல்லேகம தெரிவித்துள்ளார்.

ஊடகங்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.தங்காலை பிரதேச சபையின் தலைவர் கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர் எனவும், சிறைச் சாலையில் அவருக்கு விசேட சலுகைகள் எதுவும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நுகர்வோர் சட்டம் தொடர்பில் தெளிவுபடுத்த நடவடிக்கை

நுகர்வோர் சட்டம் தொடர் பில் வர்த்தக சமூகத்தை தெளி படுத்தவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித் துள்ளது.மாவட்ட மட்டத்தில் இந்த செயற்றிட்டத்தை முன்னெ டுக்கவுள்ளதாக நுகர்வோர் விவ கார அதிகார சபையின் பணிப் பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக் ளஸ் கூறியுள்ளார்.

நுகர்வோர் சட்டம் தொடர்பில விளக்கமளிக்கும் நடவடிக்கை ஏற்கனவே காலி மற்றும் மாத் தறை மாவட்டங்களில் முன்னெ டுக்கப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டார்.வர்த்தக சமூகத் திற்கு நுகர்வோர் சட்டம் தொடர் பில் விளக்கமளிப்பதுடன நீதியை மீறிச்செயற்படுமிடத்து சட்டநட வடிக்கை எடுக்கப்படும் என்பது தொடர்பாகவும் இதன்போது தெளிவூட்டப்படுவதாக நுகர் வோர் விவகார சபையின் பணிப் பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

சட்டவிதிகளுக்கேற்ப செயற் படுமிடத்து நுகர்வோரின் நம் பிக்கையைப் பெற்றுக்கொள்வது டன் வர்த்தக நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன் னோக்கி கொண்டுசெல்லமுடியும் என்பது

தொடர்பிலும் தெளிபடுத்து வதே இதன் நோக்கம் என நுகர்வோர் விவகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

## போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஓய்வூதியத்தில் பாரிய முறைகேடு

(கொழும்பு)

போலி ஆவணங்களை சமர்ப பித்து சுமார் 10 ஆயிரம் பேர் ஓய்வூதிய கொடுப்பனவை பெற் றுக்கொண்டுள்ளதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.ஓய்வூ திய கொடுப்பனவு திணைக்க ளம் இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளது.

திணைக்களத்தின் நிறை வேற்று பணிப்பாளர் எஸ் எச் ஹெட்டியாராச்சி இதனை தெரி வித்தார். இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணை மேற் கொள்ள இரகசிய பொலிஸா ரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்

## அரச சொத்துப் பாவனை கவனம் எடுக்கிறது பெப்ரல்

ஊவா மாகாண சபையின் சகல அமைச்சர்களும் தங்களது உத்தியோக பூர்வ வாகனங்களை விரைவாக மாகாண சபையிடம் கையளிக்க வேண்டும் என பெப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது. பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைக் குறிப்பிட்டார்.இந்த நிலையில், இந்த முறை இடம்பெறவுள்ள ஊவா மாகாண தேர்தலின் போது அரச சொத்துகளின் பாவனை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்கு 25 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம்

### குற்றம் சுமத்துகிறார் ரணில்



2007ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எரிபொருள் கூட் டுத்தாபனத்திற்கு 25 ஆயிரம் கோடி ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

கலகெதர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.இதே வேளை, சப்புகஸ்கந்தை எரி பொருள் சுத்திகரிப்பு நடவடிக்கை கள் துரிதமாக ஆரம்பிக்கப்ப டும் என அதிகாரிகள் தெரிவித் திருந்த போதிலும் இதுவரை எந்தவித உற்பத்திப்பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனியவள கூட்டுத்தாபனத் தின் தேசிய சங்கத்தின் பொதுச செயலாளர் ஆனந்த பாலித்த இந்தச்குற்றச்சாட்டை முன்வைத் துள்ளார்.கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் உரையாற் றிய அவர்; தற்போது மூன்று கப் பல்கள் எரிபொருளை இறக்குமதி செய்யும் நோக்கில் தரித்திருப்ப தாக தெரிவித்தார்.மேலும் ஒரு கப்பல் எதிர்வரும் நாட்களில் இலங் கைக்கு வரவுள்ளது.

சுத்திகரிப்பை மேற்கொள்ள முடியாமல் பாரியளவு மசகு எண் ணெய் இருப்பில் உள்ளதுடன், இறக்குமதி செய்து கொள்ள முடி யாத நிலைமையும் ஏற்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

## புதிய மதப் பிரிவுகளை தடை செய்ய வேண்டும்

### கோருகிறார் விமல்



நாட்டில் புதிதாக உருவாகியுள்ள மதப் பிரிவு களைத் தடை செய்யுமாறு வீடமைப்பு அமைச்சா விமல்வீரவன்ச அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.அண்மைக் காலங் களில் உருவான சிறிய மதப் பிரிவுகள் அனைத்தையும் இலங்கை யில் தடை செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் இலங்கையில் காணப்படும் மதப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய அனைத்து மதங்க்ளையும் தடை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு புதிய மதப் பிரிவுகளை தடை செய்வதன் மூலம் இன மத முரண பாடுகளைத் தவிர்க்க முடியும் என. அவர் சுட்டிக்காட்டியுள்ளார்,

பிரதான மதப் பிரிவுகள் மட்டுமே நாட்டில் இயங்குவதற்கு அனு மதிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.மதத்தைப் பாதுகாக்கும் போர்வையில் மத கடும்போக்குவாதத்தை பரப்பி வரும் தரப்பினருக்கு தடை விதிக்கப்படும் வரையில் இலங்கை யில் பிரச்சினைகளை தவிர்க்க முடியாது என அவர் குறிப்பிட் டுள்ளார்.கடந்த 500 ஆண்டுகளாக இலங்கையில் மூன்று அல்லது நான்கு மதங்களையே இலங்கை மக்கள் பின்பற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மரபு ரீதியான இந்தச் சமயங்களைத் தவிர்ந்த ஏனைய அண்மையில் முளைத்தவை கடும்போக்குவாத பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.அமெரிக்கா சவூதி அரேபியா போன்ற நாடுகள் இதற்காக நிதி உதவிகளை வழங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாயானா பௌத்த பிரிவினையும் தடை செய்ய வேண்டுமென அவர் கோரியுள்ளார்.யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் சைக்கிளுடன் சேர்த்து குடும்பஸ்தர் எரித்துக்கொலை



அநுராதபுரம் அசரிக்கமவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியா தவர்களினால் தாக்கி எரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரி விக்கின்றனர். அநுராதபுரம் அச ரிக்கமவைச் சேர்ந்த சிவில் பாது காப்பு பிரிவில் கடமையாற்றும் நான்கு பிள்ளைகளின் தந்தை யான இஷாக் (39 வயது) என் பவரே கொலைசெய்யப்படுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த குடும்பஸ்தர் அசரிக்கமையி லுள்ள தனது வீட்டிலிருந்து காலை 8.30 மணியளவில் அநு ராதபுரம் நோக்கி மோட்டார் சைக் கிளில் புறப்பட்டுள்ளார் .

இதன்போது அலி வெட்டுனு வெவ பிரதேசத்தின் பிரதான வீதியிலிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவிலேயே இனந்தெரி யாதவர்களால் தாக்கப்பட்டு பின்னர் மோட்டார் சைக்கிளோடு சேர்த்து எரியூட்டப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் ஒரு இலட்சத்து பதினாறாயிரம் ரூபா பணத்தைக்கொண்டு சென் றதாக முதற்கட்ட விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது. இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளார். அநுராதபுரம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊடக கற்கை நெறியானது

# சமுதாய அபிவிருத்திக்கு அவசியம்

## ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவிப்பு



(யாழ்.நிருபர்)

மாற்றமடைந்து வரும் சமுதாயத்தின் அபிவிருத்திக்கு ஊடகக் கற்கை அவசியமாகும். வடக்கு மாகாணத்தில் 26 பாடசாலைகளில் தொடர்பாடல் ஊடகக்கற்கைநெறி ஒரு பாடமாக போதிக்கப்படுகிறது.

ஏனைய பாடசாலைகளும் ஊடகக்கற்கை நெறியினைப் போதிக்க முன்வரவேண்டும். என வடமாகாண ஆளுநரின் செயலாளர். இ.இளங்கோவன் தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஊடககழகம் வடமாகாணக கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடாத்திய ஊடக எழுத்தறிவு தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர். இ.இளங்கோவன் இவ்வாறு தெரிவித்தார். ஊடகக் கற்கை தலைவர் செல்வன். சி.விஷ்ணுஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் முதன்முதலாக பாடசாலைகளில் ஊடகக்கல்வி பயிற்சி மாணவர்களை ஒன்றிணைத்து ஊடகஎழுத்தறிவு தினத்தைக் கொண்டாடும் கொக்குவில் இந்துக்கல்லூரி ஊடகக் கழகத்தினையும் அதன் பொறுப்பாசிரியர் இராஜேஸ்வரனையும் பாராட்டுகின்றேன்.

மிகநேர்த்தியாக ஒருங்கமைக்கப்படும் இந்த விழாவில் ஊடக கழகத் தலைவர் விஷ்ணுவின் பேச்சு நல்ல தமிழ் நடை என்னை மிகவும் கவர்ந்துள்ளது. நல்லதொரு சமூகத்தின் உருவாக்கத்திற்கு எடுத்துக்காட்டாக இவ் விழா அமைந்துள்ளது.

அறிவியல் சமூகத்தில் ஊடகத்துறையினைக் கற்போர் உயர்ந்த அந்தஸ்தினை பெற்றுக் கொள்கிறார்கள். புதிய எண்ணத்திற்கேற்ப புதிய சிந்தனைகளை உருவாக்கி சமுதாய மாற்றத்திற்கேற்ப புதிய சாதனைகளை நிலை நாட்ட ஊடக அறிவு உதவுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் அச்சு ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் பெரும்பங்காற்றுகின்றன ஊடகக் கற்கை மூலம் ஊடக தேர்ச்சி பெற்ற குழுமம் ஒன்று உருவாகுவது அவசியமாகும் எனவும் குறிப்பிட்டார்.(10)

# வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சில உள்ளூர் கிராம வீதிகளை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஓர் அங்கமாக அச்சுவேலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான நாவற்காடு - பயிற்றோலை வீதியினை முப்பது வருடகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் திருத்தியமைப்பதற்காக வலி.கிழக்குப் பிரதேச சபையினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக பிரதேச சபை உத்தியோகத்தர்களினால் வீதி அளக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வீதி அமைப்பதற்கு இடையூறாக உள்ள பிரதேச சபையின் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட மதில்கள் மற்றும் வேலிகளைத் தாமதமின்றி வீதி எல்லைக்கு அப்பால் பின்நகர்த்திக் கொள்ளுமாறு குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பொதுமக்களும் வீதி திருத்தத்திற்கு இடையூறாக உள்ள வேலிகள் மற்றும் மதில்களை அப்புறப்படுத்தி பின்நகர்த்தி வருவதுடன் வீதி புனரமைப்பிற்கான தமது ஆதரவினையும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வீதிக்கான கருங்கற்கள் மேற்படி வீதிக்கு அண்மையில் உள்ள பொதுக் காணி ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டு வருவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் இவ்வீதி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் நீண்ட கால கோரிக்கைகளுக்கும், அழுத்தத்திற்கும் மத்தியிலேயே தற்போது திருத்தியமைக்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (03)

# ஈ.பி.ஆர்.எல்.எவ் நடாத்திய 34 ஆவது வருடாந்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவது வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வருடாந்த மாநாட்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், ஜனநாயகமக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், தமிழீழவிடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், லங்கா சமசமாசக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணராட்ண, ஐக்கிய சோசலிசக்கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய, வடமாகாணசபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியத்தர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வின் ஆரம்பத்தில் மங்களவிளக்கேற்றலைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்ற கட்சியின் பதின்நான்கு மாநாட்டுத தீர்மானங்கள் கட்சியின் முக்கியஸ்தர்களினால் வாசிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. மேலும் சுரேஸ பிரேமச்சந்திரன் தலைமையுரையும் கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் வரவேற்புரையையும் வழங்கியதுடன் நிகழ்விற்கு வந்திருந்த கட்சித்தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரமுகர்களினால் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஜனநாயகமக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன், மாவைசேனாதிராசா, நவசமசமாசக் கட்சியின் தலைவர், விக்கிரம பாகு கருணரட்ண, ஐக்கிய கோசலிசக்கட்சியின் செயலாளர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய ஆகியோர் சிறப்புரையாற்றினர். (பா)

## றமழான் நற்சிந்தனை

லைலதுல் கத்ர் இரவை றமழான் மாதத்தின் கடைசிப்பத்து நாட்களில் ஒற்றைப் படையான இரவுகளில் தேடிக் கொள்ளுங்கள். (நூல் - புஹாரி)

(105)



# நவீன சந்தைப்பகுதி வீதிகளுக்கு காப்பெற் இடும்வேலைகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் உள்ள வீதிக்ளுக்கு காப்பெற் இடும் வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

குண்டும் குழியுமாக பயணிகளின் போக்குவரத்துக்கு இடையூறாகவும், வாகனங்களுக்கு சேதங்களை ஏற்படுத்துவதாகவும் காணப்பட்ட இந்த வீதிகள் தற்போது துரித கதியில் புனரமைக்கப்படுவதுடன் புனரமைப்பு வேலைகள் முடிவுகட்டத்தை நெருங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இந்த வீதிகள் காப்பெற் இடும் போது பயணிகளின் சிரமத்தை தவிர்க்கும் முகமாக கற்களை வீதிகளில் பறிக்காது வாகனங்களில் வைத்தே தமது தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முரசின் இன்றைய பலன்



(22.07.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 06 ஆம் திகதி.
ஏகாதசி / சித்தாமிர்தம்
கார்த்திகை நட்சத்திரம் மு.ப. 09.44 வரை. பின் ரோகிணி.
இராகு காலம 03.01 - 04.31 வரை. சுபநேரம 10.31 - 12.01 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வந்த சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்.பங்குத்தொழில் எதிர்பார்த்த நன்மை கொடாமையினால் கைவிட முடிவு செய்தல். |
| ரிஷபம் | உதவி செய்திருந்த நண்பரின் திடீர் பிரிவினால் சோக நிலை ஏற்படல். வெளியூர் பயணம் வெற்றியை அளிக்காமல் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்து விடல். |
| மிதுனம் | காதலர் வாழ்வில் ஏற்பட்டிருந்த சந்தேகக்கேடு விலகியதால் சந்தோஷம் தக்கவைத்தல். அரசியல் விமர்சனத்தினால் ஆத்மநண்பன் பகையாளி ஆகிவிடல். |
| கடகம் | சாட்சி சொல்ல நீதிமன்றத்துக்கு செல்லும் வேளை பயமுறுத்தப்பட்டதினால் அச்சமடைதல். ஆலயபரிபாலனத்தில் பதவி பெற தெரிவு செய்யப்படல். |
| சிம்மம் | புதியன கொள்வனவு செய்யும் போது அதன் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துங்கள். நட்பு வட்டம் விரிவடைந்தமையினால் காரியசித்தி ஏற்படல். |
| கன்னி | ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டதால் பெற்ற கடனை அடைக்க முடியாது திண்டாடுதல். வெளியூர் உறவினர் மனைக்கு விஜயம் செய்வதையிட்டு மகிழ்வடைதல். |
| துலாம் | ஏழரைச்சனி நடைபெறுவதினால் பங்குத்தொழிலை முறித்துக் கொள்ள விரும்பாமை. கிரகசாந்தி செய்து நற்பலன் பெற தெய்வ தலமொன்றை நாடுதல். |
| விருச்சிகம் | கைவிட்டிருந்த வெளியூர் பயணத்திற்கு நண்பரால் அழைப்பு விடுத்தல். ஆவணக்குறைபாட்டினால் போக்குவரத்தில் தண்டம் பெறுதல். |
| தனுசு | பெற்றோரின் சம்மதத்துடன் நிறைவேறிய விவாகத்தில் ஏற்பட்ட பிரச்சினை கண்டு பதகளித்தல். உரிய நேரத்தில் மனைக்கு வந்து சேர்ந்ததால் திருட்டு முறியடிப்பு. |
| மகரம் | மனையாளின் புத்திமதியை செவிமடுத்ததால் வருகை தந்த நபருக்கு உதவிக்கரம் நீட்டாமை. பெற்ற கடனால் அவமானம் ஏற்பட்டதால் சொத்தினை விற்று அடைக்க முன்வரல். |
| கும்பம் | நோயின் உபாதையினின்றும் விடுபட சத்திரசிகிச்சைக்கு உட்படல். கன்னியர் தொடர்பால் தம்பதியர் மத்தியில் சச்சரவு ஏற்பட்டு கவிநிலை பாதிக்கப்படல். |
| மீனம் | வாகனம் நிறுத்தமுன் ஓடிச்சென்று ஏற முற்பட்ட வேளை சிறுவிபத்து ஏற்படல். நீரிழிவுநோய் உணவுக்கட்டுப்பாட்டினை மேற்கொண்டதால் மாறும் அறிகுறி தென்படல். |



# ஷகிப் பகிரங்க மன்னிப்பு

(டாக்கா)

தடைக்குள்ளாகியுள்ள பங்களாதேஷ் அணியின் வீரர் ஷகிப் அல் ஹசன், பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார். அத்துடன் தன்னுடைய தடை தொடர்பாக மீள் பரிசீலனை செய்யுமாறும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஷமுடீன் சௌத்ரி உடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்த கோரிக்கையை விடுத்து, தான் நடந்து கொண்ட விதம் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, அணி மற்றும் இரசிகர்களுக்கு பிழையானதாக இருப்பதனால் அனைவரிடமும் மன்னிப்புக் கோருகின்றேன் என ஷகிப் அல் ஹசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார். தொழில் சார் கிரிக்கெட் வீரராகவும், பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்துக்கு உட்பட்ட வீரராகவும் நான் நடந்து கொண்ட விதம் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள ஷகிப் அல் ஹசன், இனி வரும் காலங்களில் தன்னை மாற்றி ஒழுக்கமானவனாக நடந்து கொள்வேன் எனவும் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தான் சர்வதேசப் போட்டிகளில் இருந்து விலகி விடுவேன் என பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துரசிங்ஹவிற்கு சவால் விட்டதன் பின்னர் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இவருக்கு எதிராக மிகக் கடுமையாக நடந்து கொண்டது. இந்தியா அணியுடனான போட்டியில் மனைவியை ஒருவர் கிண்டல் செய்தமைக்காக வீரர்கள் செல்ல முடியாத பகுதிக்கு சென்று அவரை தாக்கியது உட்பட மேலும் பல ஒழுங்கீன செயற்பாடுகளுக்காக இவரை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை 6 மாதங்களுக்கு தடை செய்ததுடன், வெளிநாட்டு தொடர்களில் விளையாடும் வாய்ப்புகள் அதிகமாக கிடைத்தமையினாலேயே இவர் சவால் விட்டார் என்ற காரணத்தினால் 2015ஆம் ஆண்டு நிறைவு வரை வெளிநாட்டில் இடம்பெறும் எந்த தொடர்களிலும் விளையாட அனுமதி வழங்கப்படாது எனவும் அறிவித்தது.

கிரிக்கெட் விளையாடாமல் இருப்பது என்பது மிகப் பெரிய வலி. அதை சமாளிப்பது கடினம். எனவே மீண்டும் ஒரு வாய்ப்பு தாருங்கள் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் ஹசன் கோரியுள்ளார். இதை உறுதி செய்துள்ள பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஷமுடீன் சௌத்ரி, குறித்த கோரிக்கையை தான் பணிப்பாளர் சபைக்கு அனுப்பியுள்ளதாகவும் தேவை ஏற்படின் அவர்கள் ஷகிப் அல் ஹசனுடன் நேரடி சந்திப்பில் ஈடுபடுவார்கள் எனவும் இல்லாவிடில் கிரிக்கெட் சபை தலைவர் நஸ்முள் கான் இது தொடர்பான இறுதி முடிவை எடுப்பார் எனவும் நிஷமுடீன் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

# கூட்டு முயற்சியால் வெற்றி; அம்லா பெருமிதம்




(காலி)

கூட்டு முயற்சியின் காரணமாகவே இலங்கை அணியை எங்களால் வீழ்த்த முடிந்தது. அத்துடன் தலைமைத்துவத்தை வெற்றியுடன் ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது என தென்னாபிரிக்க டெஸ்ட் அணிக் கப்டன் அம்லா தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியுடன் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நாங்கள் எளிதாக வெற்றியைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதற்காக போராடிய அனைத்து வீரர்களும் பாராட்டுக்குரியவர்கள். இது அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. இது போன்ற ஆடுகளங்களில் குறிப்பிட்ட பந்துவீச்சாளர்களை மட்டும் சார்ந்து இருக்க முடியாது. 2ஆவது இனிங்ஸை எந்த வித சந்தேகத்திற்கும் இடமின்றி இடைநிறுத்தினோம். ஏனெனில் எங்களுக்கு எதிரணியை வீழ்த்த நிறைய ஓவர்கள் தேவைப்பட்டன. அது மட்டுமின்றி 370 ஓட்டங்கள் என்பது போதுமான இலக்காக இருக்கும் என நினைத்தோம். அதன்படி வெற்றியையும் பெற்றுவிட்டோம். எனது தலைமையில் முதல் வெற்றியைப் பதிவாக்கியிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லோட்ஸிலும் வெடித்தது சர்ச்சை



(லண்டன்)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் ஆடுகளம் தொடர்பான பிரச்சினை முடிவதற்குள், லோட்ஸ் ஆடுகளத்தை சுத்தம் செய்தது குறித்து புதிய சர்ச்சை வெடித்துள்ளது.

நாட்டிங்கொமில் நடைபெற்ற முதல் டெஸ்ட் சமநிலையானது. இப்போட்டிக்கான ஆடுகளம் படுமந்தமாக இருந்ததாக புகார் எழுந்தது. இது குறித்து ஐ.சி.சி., விசாரித்து வருகிறது.

தற்போதைய இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்ற லோட்ஸ் ஆடுகளம் குறித்து புதிய சர்ச்சை எழுந்துள்ளது. மூன்றாவது நாள் ஆட்ட உணவு இடைவேளையின் போது, மைதான பணியாளர் ஷேன் டோகர்டி, காலணி அணிந்து ஆடுகளத்தின் நடுவில் நின்றவாறு சுத்தம் செய்தார். இது விதிமுறை மீறிய செயல். பொதுவாக ஆடுகளத்தின் ஓரத்தில் நின்று தான் சுத்தம் செய்ய வேண்டும். இங்கிலாந்து பந்துவீச்சாளர்களுக்குச் சாதகமாக ஆடுகளம் மாற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் டோகர்டி செயற்பட்டதாக கூறப்படுகிறது.

டோகர்டியின் செயலை விமர்சித்த இங்கிலாந்து நட்சத்திரம் கெவின் பீற்றர்சன், நம்பவே முடியவில்லை என டுவிட்டர் இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவத்துக்கு லோர்ட்ஸ் மைதான நிர்வாகிகள் மன்னிப்புக் கேட்டுள்ளனர். உண்மையில் தவறு நடந்து விட்டது. ஆடு களத்தை சேதப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை. இதற்காக மன்னிப்புக் கேட்கிறோம் என, குறிப்பிட்டுள்ளனர்.



# சங்காவின் சாதனை

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரு இனிங்ஸிலும் (24,76) சேர்த்து இலங்கை அணியின் குமார் சங்கக்கார 100 ஓட்டங்களை எடுத்தார். தவிர, இதன் மூலம் நடப்பு ஆண்டில் 1036 ஓட்டங்களை எட்டினார்.

இதன் மூலம், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டில் டெஸ்ட் அரங்கில் 1000 ஓட்டங்கள் மற்றும் கூடுதலான ஓட்டம் எடுத்த 6ஆவது வீரரானார். இந்திய அணி ஜாம்பவான் சச்சின் 6 முறை இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் ஹெய்டன், பொண்டிங், தென்னாபிரிக்காவின் கலிஸ், மேற்கிந்தியத்தீவுகளின் லாரா உள்ளிட்டோர் தலா ஐந்து முறை மைல் கல்லை எட்டியுள்ளனர்.



# ஆறுதல்படுத்தும் அனுஷ்கா

இங்கிலாந்து போட்டித் தொடரில் சொதப்பி வரும் ஹோலியை காதலி அனுஷ்கா சர்மா நேரில் சந்தித்து ஆறுதல் கூறி வருகிறார்.

இந்திய அணி இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதன் முதல் டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடாத ஹோலி 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் சொதப்பி வருகிறார்.

இந்தப் போட்டித் தொடருக்கு முன்னதாகவே எவரும் எனக்கு ஏதும் சொல்லி தரத்தேவையில்லை. எப்படி விளையாட வேண்டும் என்று எனக்குத் தெரியும் என்று ஹோலி கூறியிருந்தார்.

இந்நிலையில் சிறப்பாக விளையாடாத அவருக்கு நெருக்கடி அதிகரிக்க காதலியான அனுஷ்கா சர்மா ஆறுதலாக இருப்பதாக கூறப்படுகிறது. இங்கிலாந்து தொடர் ஆரம்பமாகியதில் இருந்தே அனுஷ்கா ஹோலியுடன் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மேலும் லோட்ஸ் மைதானத்தில் நேற்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போதும் அனுஷ்கா ஆட்டமிழந்து வந்த ஹோலியை ஓய்வறைக்குச் செய்து உற்சாகமூட்டி வரவேற்றார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# துடுப்பாட்டத்தில் அசத்தும் புவனேஸ்வர் குமார்

இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் அசத்தலாக ஆடிய இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் தனது 3ஆவது அரைச்சதத்தை (52) பதிவு செய்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில், ஒரு தொடரில் 9ஆவது வீரராக களமிறங்கி, மூன்று அரைசதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார்.

இந்தத் தொடரில் புவனேஷ்வர்குமார் பந்து வீச்சு மட்டுமின்றி துடுப்பாட்டத்திலும் பிரகாசித்து வருகிறார். முதலாவது டெஸ்டில் இரண்டு அரைசதங்களை அடித்து பிரமாதப்படுத்திய அவர் லோட்ஸ் டெஸ்டின் 2ஆவது இனிங்ஸிலும் அரைச்சதம் விளாசி, அணி நல்ல இலக்கை நிர்ணயிக்க உதவிகரமாக இருந்துள்ளார். பிரதான துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பி வரும் நிலையில், அவர் ஒரு முதிர்ச்சியான துடுப்பாட்ட வீரர் போன்று ஆடுவது பலரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியிருக்கிறது.

# குக்கை நீக்கவேண்டும்; வலுக்கிறது கோரிக்கை

(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான லோட்ஸ் டெஸ்டில் இங்கிலாந்து கப்டன் அலெஸ்டர் குக்கின் துடுப்பாட்டத் திறன், அவரது யுத்திகள் எடுபடவில்லை. எனவே அவரை கப்டன் பதவியிலிருந்து நீக்கும் முயற்சியை இங்கிலாந்து கிரிக்கெட் சபை மேற்கொள்ள வேண்டும் என இங்கிலாந்து முன்னாள் கப்டன் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

குக்கின் அணுகுமுறையில் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அவர் அநேகமாக தற்காப்பு உத்திகளையே கைக்கொண்டு வருகின்றார். நெருக்கடியிலிருந்து மீண்டு அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இதன் காரணமாகவே இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரை இழப்பதற்கு முக்கிய காரணம். எனவே, இங்கிலாந்து கிரிக்கெட் சபை புதிய தலைவரைத் தேடிக் கொள்வதன் மூலம் தோல்விகளிலிருந்து மீண்டெழ முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னும் குக்கின் தலைமை குறித்து விமர்ச்சித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜியார்ஜியோவின் 2ஆவது இனிங்ஸ்



(லிவர்னோ)

உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியின் போது லீக் சுற்றில் உருகுவே வீரர் சுவாரசிடம் வசமாக கடிபட்டு பிரபலமானவர் இத்தாலியின் ஜியார்ஜியோ செலினி. தன்னைக் கடித்த சுவாரசை பெருந்தன்மையுடன் மன்னித்த 29 வயதான செலினி தனது வாழ்க்கையில் 2ஆவது இனிங்ஸில் அடியெடுத்து வைத்துள்ளார்.

இவர் தனது நீண்ட கால காதலி கரோலினா போனிஸ்டாலியை நேற்று முன்தினம் கரம் பிடித்தார். இத்தாலியின் லிவர்னோ நகரில் இவர்களது திருமணம் நடைபெற்றது. செலினி விளையாடும் ஜுவண்டஸ் கிளப் அவருக்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளது.

# கிண்ணம் வென்றது வைகறை

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் 95ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட தாச்சிப் போட்டியில் உடுவில் புதுமடம் வைகறை அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் பல தாச்சி அணிகள் பங்குகொண்டன. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இதில் மயிலிட்டி கண்ணகி அணியும், உடுவில் புதுமடம் வைகறை அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டதுடன் பழங்களைப் பெற்று வந்தன. இருப்பினும் பிற்பாதி ஆட்டத்தில் வேகமாகச் செயற்பட்ட வைகறை அணி பழங்களை மளமளவெனச் சேர்த்தது. இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் கண்ணகி அணி திணறியது. இறுதியில் புதுமடம் வைகறை அணி 7-5 என்ற பழங்கள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் தாச்சிச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள், இரசிகர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர்.



கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கனகபுரம் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஜெயந்திநகர் அணியைக் காணலாம். கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் உருத்திரபுரம் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (81)

### புகழினியன் பொறுப்பான ஆட்டம்

# போராடி வென்றது சென். ஜோண்ஸ்

(யாழ்ப்பாணம்)

புகழினியனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி த்ரில் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த வாரம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி புகழினியன், காருணியன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் சாரன்ராஜ் நிவாஸ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மகாஜனக் கல்லூரி அணி 44 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாரன்ராஜ் 41, நிவாஸ் 34, செந்தூரன், டினிஷன் ஆகியோர் தலா 25, பிரகாஸ் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புகழினியன், காருணியன் ஆகியோர் தலா மூன்று, கிருசாந் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




பதிலுக்கு 184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி செந்தூரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. இருப்பினும் புகழினியன் காருணியன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி இலக்கை நோக்கி நிதானமாக சென்றது. இடையிடையே விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட நிலையில் போட்டி பரபரப்பான நிலையை எட்டியது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 38 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது. இதில் புகழினியன் 30, காருணியன் 29, தேவகுமாரன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செந்தூரன் நான்கு, நிவாஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (93)

# தேசிய மட்ட கூடைப்பந்து

## யாழ். மாவட்டம் மூன்றாமிடம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட பெண்கள் அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டித் தொடர் கடந்த 19,20ஆம் திகதிகளில் கொழும்பு மகரகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. ஆண், பெண் என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அணிகள் பங்குகொண்டன.

பெண்கள பிரிவில் முதல் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கொழும்பு நகர அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 64-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் மட்டக்களப்பு மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 48-24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் கொழும்பு மாவட்ட அணி 51-28 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 50-06 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

மூன்றாமிடத்தைப் பிடித்த யாழ். மாவட்ட அணிக்கு விளையாட்டு ஆர்வலர்கள் பலர் வாழ்த்துத் தெரிவித்தனர். இதேவேளை, ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி இரண்டாவது சுற்றுடன் வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## பொதுநலவாய விளையாட்டு

# நாளை ஆரம்பம்

20ஆவது பொதுநலவாய விளையாட்டு ஸ்கொட்லாந்தின் மிகப்பெரும் நகரமான கிளாஸ்கோவில் நடைபெறவுள்ளதுடன் இதன் ஆரம்ப நிகழ்வு இரண்டாவது ராணி எலிசபெத் தலைமையில் செல்டிக் பார்க்கில் நாளை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி வரை 11 நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் இலங்கை உட்பட 71 நாடுகளை சேர்ந்த 4,500 விளையாட்டு வீரர்கள் 18 விளையாட்டுக்களில் பங்குபற்றவுள்ளனர்.

இப்போட்டியில் 261 பதக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விசேட தேவையுடையோருக்கான பல விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளதுடன் 22 தங்கப்பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் கூடிய பொதுநலவாய விளையாட்டுக்கள் கூட்டமைப்பு, வெற்றி பெற்ற நகராக ஸ்கொட்லாந்தின் பெயரை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்து மாவட்டப் போட்டிகள்

# ஆவரங்கால் இந்து இளைஞர்

## யாழ். மாவட்டப் போட்டியில் சம்பியன்

(அச்சுவேலி)

ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் மாவட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. முதல் செட்டை 25-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் நவஜீவன் அணி கைப்பற்றியது. இதன் பின்னர் சுதாகரித்துக் கொண்டு ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மளமளவென புள்ளிகளைப் பெற்றதுடன் செட்களையும் கைப்பற்றிக் கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்ட நவஜீவன் அணி செட்களைக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. நிறைவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தேசிய மட்ட போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தகுதி பெற்றது.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டி இன்றைய தினம் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆரவங்கால் இந்து இளைஞர் அணியும் காங்கேசன்துறை ஐக்கிய அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# கிளிநொச்சி மாவட்ட பெண்கள்

## பளை அதிசயம் அணி சம்பியன்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரில் பளை அதிசயம் அணி கிண்ணத்தை வென்றது.

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் கடந்த வாரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரில் பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் புதிய பாரதி அணியும் பளை அதிசயம் அணியும் முட்டிமோதிக் கொண்டன.

ஆரம்பம் முதலே பளை அதிசய அணி வீராங்கனைகள் புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தன. பதிலுக்கு புதிய பாரதி அணி புள்ளிகளைப் பெற்றபோதும் செட்களைக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. நிறைவில் பளை அதிசயம் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அத்துடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


இதேவேளை, ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் கிருஷ்ணா பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கிளிநொச்சி ஆதவன் அணியை எதிர்த்து புதிய பாரதி அணியும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கிருஷ்ணா பாரதி அணியை எதிர்த்து இளந் தென்றல் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# தங்கத்தின் 'நனோ' நிறங்கள்

- அருண் நரசிம்மன் -

சிலப்பதிகாரத்தில் "கடல் ஆடு காதையில்" மாதவி அணிந்திருந்த நகைகளில் இருந்து இன்றைய பெண்கள் அணியும் தங்கம்வரை மஞ்சள் நிறத்தில்தான் நம் கண்களுக்குத் தெரியும். காரணம் சற்று தீவிரமானது. விவரிப்போம்.

ஐன்ஸ்டீனின் சிறப்புச் சார்பியல் கோட்பாட்டை (special relativity theory) நீங்கள் அறிந்திருக்கலாம். இதன் ஒரு கருத்தாக்கத்தின்படி பிரபஞ்சத்தில் எப்பருப்பொருளுக்கும் பயணம் செய்யமுடிந்த உச்சகட்ட வேகம் என்பது ஒளியின் வேகம் தான். ஒளி விநாடிக்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கிலோமீற்றர்கள் செல்லும். இவ்வாறு உச்சவரம்பை நோக்கி வேகத்தை அதிகரிக்கையில் ஒரு பருப்பொருளின் (matter) நிறையும் (mass) அபரிமிதமாய் அதிகரித்துக்கொண்டே சென்று முடிவிலியான (infinite) மதிப்பை எட்டிவிடும்.




அணுவின் உள்ளே இலத்திரன்கள் மத்தியில் இருக்கும் நியூக்ளியஸ் (கரு) எனப்படும் பகுதியைச் சுற்றிவருவதாய் நாம் அறிந்துகொண்டுள்ளோம். பொதுவாக எளிமையான அணுக்களில் இவ்வாறு இலத்திரன் சுற்றுவதின் வேகம் ஒளி வேகத்தை விடப் பன்மடங்கு குறைவே. ஆனால், மூலக்கூறு நிறை அதிகரிக்கையில் (heavier elements), தங்கம், வெள்ளி, பித்தளை, தங்குதன் என்று பருமனான அணுக்களில் இலத்திரன் வேகம் மாறுபடும்.

பருமனான அணுக்களின் மத்தியிலுள்ள கருவின் நிறை அதிகரிப்பதால், அவற்றை அருகில் சுற்றி வரும் இலத்திரன்களும் அதிகமாக ஈர்க்கப்படும். இதனால் கருவிற்கு நெருக்கமான முதல் சுற்றுப்பாதையில் இருக்கும் இலத்திரன்களின் வேகம், சார்பியல் கோட்பாட்டின்படி அதிகரிக்கும். ஒளியின் வேகத்திற்கு அருகில் செல்வதால், இலத்திரன்களின் நிறையும் அதிகரிக்கும். இதனால் அவற்றின் ஆற்றல் குறையும்.

கருவில் இருந்து தள்ளி விளிம்புச் சுற்றுப்பாதையில் உள்ள இலத்திரன்கள் சார்பியல் விளைவுகளினால் அதிகம் பாதிக்கப்படாது. இவற்றின் வேகம் ஒளியின் வேகத்தைவிட மிகக்குறைவாகவே இருக்கும். இதனால், சாதாரண எடையுடனேயே இவை உலவும். ஆற்றலும் அதிகமாய்த் தேங்கியிருக்கும்.


உலோகமான தங்கம் பருப்பொருளாய் (நகைகளாய், கட்டிகளாய்) இருக்கையில், இலத்திரன்களும் அவற்றின் அலைவரிசைகளுமே அணுக்கூட்டணியின் தொடர்ச்சியை கொடுக்கின்றது. ஒவ்வொரு அணுவிலும் வெளிச்சுற்றுப்பாதையிலிருக்கும் இலத்திரன்களுக்கும் உள்சுற்றுப்பாதையிலிருக்கும் இலத்திரன்களுக்குமான ஆற்றல் வித்தியாசப்படுகிறதல்லவா. இந்த ஆற்றல் மதிப்பின் வித்தியாசமே, வெளியிலிருந்து மின்காந்தக்கதிரியக்கம் (electromagnetic radiation) அல்லது "ஒளி" அணுக்களின் மீது ஒளிருகையில், நீல நிற ஒளியாலான ∴ போட்டன்களாய் வெளிச்சுற்றிலிருந்து உள்சுற்றிலிருக்கும் இலத்திரன்களுக்கு செலுத்தப்படுகிறது. இதனால், நாம் தங்க அணுக்களின் கூட்டணி (அதாவது, பருப்பொருள் தங்கத்தின்) மேல் பாயும் சூரிய ஒளியிலிருந்து நீல நிறத்தை தங்கம் அணுக்குள் உறிஞ்சிக்கொண்டுவிடுகிறது. நீல நிறத்தின் எதிர் நிறமான மஞ்சள் நிறத்தை உமிழ்கிறது.

வெளிச்சத்தில் பார்க்கையில் நம் கண்களுக்கு தங்கம் மஞ்சள் நிறமாகத் தெரிகிறது.

இது சாதாரண தங்கம். இனி நனோ-தங்கத்தை பார்க்கலாம்.

நனோ-அளவு என்பது ஒரு மில்லிமீற்றரில் பத்து இலட்சம் பங்கு. சில நனோ-மீற்றர்களில், பல்லாயிரம் அணுக்கள் இருக்கலாம்.

நேரடியாக "நனோ-தங்கத்தை" அடைய, மில்லிமீற்றர் அளவிலிருந்து பத்து இலட்சம் பங்கு குறைவான அளவிற்கு தங்கத்தை சிறியதாக வெட்டியெடுக்க வேண்டும். இதற்குப் பதிலாக, தங்கப்பாளத்தை உராய்ந்து, வெளிப்படும் நனோ-அளவிலான துகள்களை நீர்மத்தில் கூழ்மநிலையில் (colloidal) கரைத்து வைத்திருப்பார்கள்.




நனோ - மீற்றர் அளவில் சில ஆயிரம் அணுக்களின் கூட்டணியில் ஒவ்வொரு தங்க அணுவைச் சுற்றியும் சில ஆயிரம் அணுக்களின் சேர்ந்த நனோ-அளவு திடல் ஆகையால் இலத்திரன்கள் அதிர்ந்துகொண்டிருக்கும்.

சிறுவயதில் சோடாமூடியில் ஓட்டைபோட்டு நூலில் கட்டி கிறுகிறுவென சுற்றி பக்கவாட்டில் நூலை இழுத்தால் சுழன்றபடி சோடாமூடி மேலும் கீழுமாய் அதிருமே, கவனித்திருக்கிறீர்களா. தனித்தனியே இரண்டு நூல்களில் சுற்றும் (இரண்டு) சோடா மூடிகளை, அருகருகே மேலொன்றும் கீழொன்றுமாய் அமைத்துக்கொள்வோம். மேல்-கீழ் என அதிரும் இச்சோடாமூடிகள் சிலசமயங்களில் ஒன்றுடன் ஒன்று தொட்டுக்கொள்ளும். வேறுசமயங்களில் விலகியிருக்கும்.

இதுபோல ஒவ்வொரு அணுவிலும் வெளிச் சுற்றுப்பாதையிலுள்ள இலத்திரன்களும் உள்சுற்றுப்பாதையில் இருக்கும் இலத்திரன்களும் அதிர்ந்து கொண்டிருக்கும். இவற்றைக் குறுக்கு வெட்டில்; மேலொன்று கீழொன்றாய் பாவித்தால், வேறு சுற்றுப்பாதைகளில் பயணித்துக்கொண்டிருக்கும் இரண்டு இலத்திரன்கள் அதிர்வினால், குறுக்கே மிக அருகே வந்துபோகும் அல்லவா.

நனோ-மீற்றர் அளவில் சில ஆயிரம் அணுக்களே இருக்கையில் இவ்வாறு அதிர்ந்து நெருங்குவது இலத்திரன்களுக்கு சகஜம். இவ்வதிர்வினால், வெளிச்சுற்றில் இருக்கும் இலத்திரன்கள், உள்சுற்றில் இருக்கும் இலத்திரன்களுக்கு அருகே செல்ல முடிவதால், குறைந்த இடைவெளியில் ஆற்றலை பரிமாறிக்கொள்வதற்குக் குறைவான அலைநீளம் கொண்ட போட்டன்களே போதுமென்றாகிவிடும்.

முன்னர் பருப்பொருளாய் இருக்கையில் சுற்றுப்பாதைகளிடையே இடைவெளி அதிகமென்பதால், அதிக அலை நீளமுடைய நீல நிற போட்டன்களினால் (நீல ஒளி) ஆற்றலை பறிமாறிக்கொண்டன எனப் பார்த்தோம். இப்போதோ, சுற்றுப்பாதைகளுக்கிடையே தூரம் குறைந்துவிடுவதால், ஆற்றலை (மஞ்சள் போன்ற) குறைவான அலை நீளத்திலான போட்டன்களை வைத்து பரிமாறிக்கொள்கின்றன. இதனால், தன் மீது பாயும் ஒளியிலிருந்து நனோ-தங்கத்தினால் மஞ்சள் நிறம் உறிஞ்சப்பட்டு, நீல நிற ஒளி உமிழப்படுகிறது.

நனோ-தங்கத் துகள்கள் நீல நிறமாய் நம் கண்களுக்குத் தெரியும்.

நனோ-தங்கத்துகள்களை எண்ணிக்கையில் மேலும் குறைத்து, 10-15 நனோ-மீற்றர்களில் தங்க அணுக்கூட்டணித்திடலை (nano-gold field) அமைத்தால், ஒளியில், அத்தங்கம் மேலும் ஊதா நிறமாய் தெரியும். இப்படியே நனோ - அளவைச் சுருக்கிக்கொண்டே போனால், கூழ்ம நிலையில், நனோ-தங்கத் துகள்கள், மஞ்சளை விட்டு இளஞ்சிவப்பாய் தெரிவதையும் கண்டிருக்கிறார்கள்.

இது நனோ-அளவில் நடக்கும் அறிவியல் விளைவு. மில்லிமீற்றர், மீட்டர் அளவுகளில் இந்த விளைவை எதிர்பார்க்கமுடியாது.

# நோபல் அருங்காட்சியகம்



ஸ்வீடனின் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் "நோபல் மியூசியம்" என்னும் "நோபல் அருங்காட்சியகம்" அமைந்துள்ளது. நகரின் மையத்தில் உள்ள றோயல் அரண்மனைக்கு அருகே இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களின் புகைப்படங்கள் அவர்களது வாழ்க்கை வரலாறு, தமது துறைகளில் அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், அவர்களது சேவை ஆகியவை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் அல்∴பிரட் நோபல் பயன்படுத்திய பொருள்கள், அவரது அரிய புகைப்படங்கள், அவர் எழுதிய இறுதி உயில் ஆகியவற்றையும் நாம் காணலாம்.

நோபல் பரிசு பெற்றவர்கள் மட்டுமின்றி நோபல் பரிசுக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் பட்டியலும் இங்கு காணக் கிடைக்கிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஹிட்லர், லெனின் போன்றவர்கள் அமைதிக்கான நோபல் பரிசுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற தகவலே!

1948 ஆம் ஆண்டு உலக அமைதிக்காக மகாத்மா காந்தியின் பெயர் பெரும்பாலான நாடுகளால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதே ஆண்டில் அவர் படுகொலை செய்யப்பட்டதால் அப்பரிசு அவருக்கு வழங்கப்படவில்லை. ஏனெனில் உயிருடன் இருப்பவர்களுக்கு மட்டுமே பரிசு வழங்கப்பட வேண்டும் என்பது அல்∴பிரட் நோபலின் விருப்பமாகும்.

இந்த அருங்காட்சியகத்தில் "பார்வையாளர் புத்தகம்" என்று எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக கைவைத்த நாற்காலியின் பின்பகுதியில் வெள்ளை மை கொண்ட பேனாவால் கையெழுத்திடலாம். இதை நம்மைப் போன்ற சாமானியர் எவரும் செய்துவிட முடியாது. உலகின் பெருந்தலைவர்களுக்கும், நோபல் பரிசு பெற்றவர்களுக்கும் மட்டுமே இந்தப் பாக்கியம் கிட்டும்.

இந்த நடைமுறைக்குப் பின்னாலும் ஒரு சுவையான சம்பவம் இருக்கிறது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் இந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டபொழுது பார்வையாளர் புத்தகத்தில் தன் கருத்துகளைப் பதிவு செய்ய விரும்பிக் கேட்டிருக்கிறார்.

ஆனால் அப்படி எந்தப் புத்தகமும் இல்லாததால் ஒரு நாற்காலியைக் கொடுத்து அதன் பின்பகுதியில் கையொப்பமிடச் சொல்லியுள்ளார்கள். அன்றிலிருந்து இதுவே நடைமுறையாக இருக்கிறது. நோபல் பரிசு பெற்ற உடனேயே நாற்காலியில் கையொப்பமிட விரைந்து வருவது வேடிக்கை ஆகும்.

ஆனால் இதிலும் விதிவிலக்காக சாமானியப் பெண் ஒருத்தி மட்டும் நாற்காலியில் கையொப்பமிட அனுமதிக்கப்பட்டுள்ளார். யார் அவர்? மேரி க்யூரியின் பேத்திதான் அவர். சும்மாவா? நோபல் பரிசு பெற்ற ஐந்து பேர்களைக் கொண்ட குடும்பத்திலிருந்து வந்தவராயிற்றே!



# கலோரியை அளக்க...

பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு வந்த ஹொலிவுட் (விஞ்ஞானப்) படங்களில் இடம்பெற்ற புதுமையான கருவிகளெல்லாம் இப்போது நிஜமாகி வருகின்றன.

அப்படிப்பட்டவற்றில் ஒன்றுதான் இந்த "டெலிஸ்பெக்". கைக்குள் அடங்கிவிடக் கூடிய ஒரு சிறிய கருவி. இந்தக் கருவியை, நாம் வாங்கும் எந்தவிதமான உணவுப் பொருள் மீதும் காட்டினால் போதும். உடனே, அந்த உணவில் எவ்வளவு கலோரி இருக்கிறது, சீனியின் அளவு எவ்வளவு, கொழுப்புச் சத்து எவ்வளவு என்று அத்தனை தகவல்களையும் நமது செல்போனுக்கு சமிக்ஞைகளாக அனுப்பி விடுகிறது.

நமக்கு அந்த உணவுப்பொருள் தேவைதானா என்பதை உடனடியாகத் தெரிந்து கொண்டு வாங்கலாம் அல்லது வாங்குவதைத் தவிர்த்து விடலாம்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தக் கருவி விற்பனைக்கு வந்துவிடுமாம்.

# நோயுற்றவர்களின் உரிமைப் போராட்டம்

5

Dr.சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்.
யாழ் போதனா வைத்தியசாலை.
(நன்றி: Jaffna Diabetic Centre)



**நோ**யுற்றவர்கள் நோய்காரணமாகவும், பல வசதிக்குறைவுகள் காரணமாகவும், உரிமை மீறல்கள் அல்லது அவர்களின் உரிமைகள் மதிக்கப்படாமை காரணமாகவும் அவமதிப்புக்கள் காரணமாகவும் ஆதரவின்மை, பாரமரிப்பு போதாமை போன்ற காரணங்களினாலும் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு ஆளாகிவருகிறார்கள்.

இந்த நிலையை மாற்றுவதற்கு வைத்தியசாலை மட்டங்களிலும், சமுதாய மட்டங்களிலும் பல பரந்துபட்ட நடவடிக்கைகள் தேவையாக இருக்கின்றது. இதன் மூலம் பல தவறான புரிந்துணர்வுகளையும் நிவர்த்தி செய்ய முடியும். நோயுற்றவர்களும் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு தம்மாலாக முயற்சிகளை எடுப்பதற்கு முயலவேண்டும்.

ஒருவர் தொழில்புரியும் இடத்தில் காணப்படும் அபாயநிலைமை காரணமாக நோய்வாய்ப்பட்டால் அல்லது காயமுற்றால் அதற்கான நிவாரணத்தை தொழில் வழங்குனரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உரிமை இருக்கின்றது.

அத்துடன் நிரந்தர தொழில் புரியும் காலத்திலே ஒருவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டால் அவர் 3 மாத காலம் வரை சம்பளத்துடனான லீவு பெறும் உரிமை இருக்கின்றது.

மருத்துவக்குழுவோ அல்லது ஊடகத்துறையினரோ நோயுற்ற ஒருவரின் நோய் சம்பந்தமான தகவல்களை அம்பலப்படுத்தினால் அதுசம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது.

வைத்திய நிலையங்களில் தாம் அவமதிக்கப்பட்டதாக உணர்ந்தாலோ அல்லது தமது பராமரிப்பு முறை திருப்திகரமாக இல்லை என்று உணர்ந்தாலோ அது சம்பந்தமாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டு தகுந்த நடவடிக்கை எடுத்து அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுப்பது நோயுற்றவர்களின் உரிமையும் கடமையுமாகும்.

மருத்துவ ஆலோசனைக்கு எதிராக ஒருவர் வீடு செல்லும் சந்தர்ப்பங்களில்கூட நோய்நிருபண அட்டையையும் வீட்டிலே பாவிப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வரவேண்டிய திகதிகளையும் கேட்டு பெற்றுக்கொள்ளும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது.

மனம் மாறி அல்லது நோய் கடுமையாகி மீண்டும் அவர் வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெற விருப்பப்படின் எந்தவித மனச்சஞ்சலமும் இன்றி வைத்தியசாலைக்கு வந்து அனுமதிபெறும் உரிமை அவருக்கு இருக்கின்றது.

தரக்குறைவான மருந்துகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டு வருகின்றன. இதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் கடமையும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

வைத்திய நிலையங்களில் தமக்கான அடிப்படை வசதிகளை கேட்டு பெற்றுக்கொள்ளும் உரிமையும் நோயுற்றவருக்கு இருக்கின்றது.

தொடர்ந்து மருந்தெடுக்க வேண்டிய தேவை உடையவர்கள் வைத்தியசாலை கிளினிக்கில் OPD ஊடாக தாமாகவே சென்று சேர்ந்துகொள்ளும் உரிமை இருக்கிறது. இதற்கு வேறு வைத்தியர்களின் சிபார்சு கடிதங்களோ அனுமதிக் கடிதங்களோ அவசியமில்லை.

எமது உரிமைகள் மீறப்படுவதாக நாம் உணரும்பொழுது அது சம்பந்தமாக பேசுவதற்கு நாம் அச்சப்படவோ வெட்கப்படவோ வேண்டிய அவசியமில்லை. உரிமைகளை மறுப்பவன்தான் உண்மையிலேயே மனிதகுலத்தின் முன் வெட்கப்பட வேண்டியவன்.

நோயுற்றவர்களின் உரிமைகள் பற்றி சிந்திப்பது முரண்பாடுகளை வளர்த்துக்கொள்வதற்காக அல்ல. இவை உண்மையிலேயே மருத்துவக் குழுவிற்கும் நோயுற்றவர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வை மேம்படுத்த உறுதுணையாக அமையும்.

(தொடரும்...)

# மனைவி முக்கியமா? ஃபேஸ்புக் முக்கியமா?

- வா.மணிகண்டன் -

**ந**மக்கு எப்பொழுதுமே சண்டையில் சுவாரசியம் அதிகம். இன்று கூட ஒரு ஏ.டி.எம். பூத்தில் சண்டை நடந்தது. பெரிய பிரச்சின்னதான். ஆனால் சிம்பிளாக முடித்துவிட்டார்கள். பணம் எடுக்க வரும் பெண்களை காவலாளி தனது மொபைலில் படம் எடுக்கிறானாம். ஒரு பெண் பொலிஸிடம் புகார் சொல்லிவிட்டாள்.

ரோந்து சென்ற இரண்டு பொலிசார் வந்து கைபேசியை வாங்கிப் பார்த்திருக்கிறார்கள். வெவ்வேறு கோணத்தில் எடுத்து வைத்திருந்தானாம். நான்கு சாத்து சாத்தி துரத்திவிட்டார்கள். வங்கியிலும் தகவல் சொல்லிவிட்டார்களாம். அவ்வளவுதான், இனி அவனுக்கு இந்த வங்கியில் வேலை இருக்காது. ஆனால் வேறொரு வங்கியில் சேர்வதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. வேறொரு ஏ.டி.எம்.மில் அமர்ந்து படம் எடுப்பான்.

மொத்த நிகழ்வும் பத்து நிமிடங்கள்தான் நடந்தது. அதற்குள்ளாகவே அவனுக்கு வாய் வீங்கிப் போனது. அவனுக்கு வாய் வீங்கிய வேகத்தைக் காட்டிலும் ட்ராபிக் வீங்கிப் போனது. என்னை மாதிரியே ஊரில் ஏகப்பட்ட பேர் திரிகிறார்கள். பைக்கை ஓரங்கட்டிவிட்டு வாயைப் பிளந்து கொண்டு வேடிக்கை பார்த்தோம். அதற்குள் பொலிஸார் சம்பவத்தை முடித்துவிட்டு வந்து எங்களையெல்லாம் துரத்திவிட்டார்கள். பத்து நிமிட இன்பம்.

இணையத்திலும் இதே concept வேலைக்கு ஆகும். அவ்வப்போது ஏதாவது அக்கப்போரை செய்து கொண்டேயிருக்க வேண்டும். கூட்டம் சேர்த்துவிடலாம்.

முன்பெல்லாம் பத்திரிகைகளில் ஏதாவது controversy உரு வானால் அதற்கு மெனக்கெட்டு பதில் எழுதுவார்கள். அந்த பதில் பிடித்திருந்தால் அடுத்த இதழில் பிரசுரம் செய்வார்கள். இல்லையென்றால் குப்பையில் போட்டுவிடுவார்கள். மீறிப்போனால் ஓரிரு இதழ்களுக்கு விவாதம் இழுக்கும். அதோடு முடிந்து போகும்.

இணையத்தில் நிலைமை அப்படியா இருக்கிறது? ஒரு கருத்தை படித்துவிட்டு அடுத்த ஒன்றரை நிமிடத்தில் பதில் எழுதிவிடுகிறோம். இந்தப் பதிலுக்கு அடுத்த முக்கால் நிமிடத்தில் இன்னொரு பதில் வந்துவிடுகிறது. விவாதங்களில் நம் தலைமுறை உணர்ச்சியைத்தான் முன் வைக்கிறது. அறிவு பின்னால் ஒதுங்கிக் கொள்கிறது.




அறிவே இல்லாமல் விவாதம் செய்கிறோம் என்று சொல்லவில்லை - அறிவை பின் தங்கச் சொல்லிவிட்டு விவாதிக்கிறோம். இந்தச் சூழலில் விவாதம் செய்வதற்கு எல்லோராலும் இயலுவதில்லை. அப்படியே இறங்கினாலும் கொஞ்ச நேரத்திலேயே களைத்துப் போய்விடுவோம்.

இணையத்தில் சண்டைக்குத் தயாரானால் கம்ப்யூட்டர் முன்னாலேயே அமர்ந்து கொள்ள வேண்டியதுதான். இப்பொழுதே கூட ஒரு நாளின் கணிசமான நேரத்தை இணையம் எடுத்துக் கொள்கிறது. இனியும் நேரத்தை அதிகமாக்கினால் நிலைமை மோசமாகிவிடும்.

அந்தக் காலத்தில் - சங்க காலத்தில் - நாழிகைக் கணக்கர் என்றொரு வேலை இருந்திருக்கிறது. அவரது வேலையே நேரத்தைக் கணக்கிடுவதுதான். இரவு பகல் பாராமல் நேரத்தைக் கணக்கிட்டபடியே இருப்பார்களாம். கணக்கிட்ட நேரத்தை அரசனுக்கு இசைப்பாடல்கள் வழியாக அறிவிப்பார்கள். குடைச்சல் பிடித்த வேலை இது.

இந்த நாழிகைக் கணக்கரின் நவீன வடிவம்தான் இணையப் பயனாளிகள். அவர்கள் ராப்பகலாக நேரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நாம் ராப்பகலாக மொனிட்டரையே பார்த்துக் கொண்டிருக்கிறோம். ரயில் நிலையம், விமான நிலையம் போன்ற இடங்களில் பார்க்க வேண்டுமே - அத்தனை பேரின் கைகளிலும் மொபைல்தான். அத்தனை மொபைலிலும் ஃபேஸ்புக்தான்.

இது ஒரு வுசயி. மக்கள் எந்தவிதத்திலும் நகர்ந்துவிடாமல் இணைய நிறுவனங்கள் பார்த்துக் கொள்கிறார்கள். சமூக வலைத்தளங்கள் நிறைய உளவியல் நிபுணர்களை வேலைக்கு வைத்திருப்பதாக சொல்கிறார்கள்.

இதில் எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை - அவர்களது நோக்கமெல்லாம் தங்களது பயனாளிகளை எப்படி எமோஷனலாக பிணைத்து வைத்திருப்பது என்பதுதான்- மனைவியை விடவும் ஃபேஸ்புக் முக்கியம். மகனைவிடவும் ட்விட்டர் முக்கியம், வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும் விட கூகிள் ப்ளஸ் முக்கியம்.

வெளிப்படையாக "உங்களுக்கு மனைவி முக்கியமா? ஃபேஸ்புக் முக்கியமா?" என்றால் மனைவி என்றுதான் சொல்வோம். ஆனால் காலையில் கண் விழித்தவுடன் ஃபேஸ்புக்கைத் திறக்கத் தோன்றும். "மகன் தான் முக்கியம்" என்று நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் இரவு நேரத்தில் அவன் நமது ட்விட்டர் செயல்பாட்டில் குறுக்கீடு செய்தால் சுள்ளென்று உச்சியில் கோபம் ஏறும்.

மனைவியோ கணவனோ- கம்யூட்டரையும் மொபைலையும் மூடிவைக்கச் சொன்னால் நம்மையுமறியாமல் பதற்றமடைவோம். இதுதான் சமூக வலைத்தளங்களைப் பொறுத்தவரையிலும் "எமோஷனல் பிணைப்பு". இதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். Addiction என்று மேம்போக்காகச் சொல்லிவிடலாம். ஆனால் இதன் மனோவியல் கூறுகள் மிகச் சிக்கலானவை.

இணையத்தில் நாம் உருவாக்கும் பிரச்சினைகள், சண்டைகள், அடுத்தவர்கள் நம்மை கவனிப்பதற்காகச் செய்யும் தகிடுதத்தங்கள் என எல்லாவற்றையும் இந்த மனோவியல் கூறுகளோடு இணைத்துப் பார்க்க முடியும்.

சமூக வலைத்தளங்கள் உருவாக்கும் இத்தகைய மனோவியல் சிக்கல்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் இன்னமும் நம் நாட்டில் தொடங்கவில்லை. மேலை நாடுகளில் ஆரம்பித்துவிட்டார்கள்.

மக்களை எப்படி தங்களின் சமூக வலைத்தளங்களுடன் தொடர்ந்து பிணைத்து வைத்திருப்பது என்பதில்தான் அந்நிறுவனங்களின் வெற்றியும் இந்தச் சமூக வலைத்தளங்களுடனான எமோஷனல் பிணைப்பை எப்படி துண்டித்துக் கொள்வது என்பதில்தான் நம் வெற்றியும் இருக்கிறது.




# குறையை அக்கறையுடன் பார்

ஒரு காட்டில் இரண்டு கரடிகள் நண்பர்களாக இருந்தன. அவை எங்கு சென்றாலும் சேர்ந்தே சென்று தங்கள் நட்பின் ஆழத்தை அனைத்து விலங்குகளுக்கும் புலப்படுத்தின. ஒரு நாள் இரை தேடிவிட்டு மலைப் பாதையில் நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு கரடியின் மனதில், இந்த மலையின் உச்சிக்குச் சென்று மேலே நின்று சுற்றியுள்ள இயற்கையைப் பார்த்து இரசிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. உடனே, தன் நண்பன் கரடியிடம் தனது ஆசையைக் கூறியது. இதனைக் கேட்டதும் அந்தக் கரடிக்கும் மலை உச்சிக் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. தன் நண்பனைப் பார்த்து, சரி வா இருவரும் சேர்ந்து மலை ஏறிச் சென்று இரசிக்கலாம் என்றது. மலை உச்சியைத் தொடும் ஆர்வத்தில் போட்டிபோட்டுக் கொண்டு ஏறத் தொடங்கின. முதல் கரடி இரண்டாம் கரடியைப் பார்த்து, கொஞ்சம் மெதுவாகப் போ, விழுந்திடப் போற என்றது. இதனைக் கேட்ட இரண்டாம் கரடி, "நீ முதல்ல வந்துடலாம் என்று நினைக்கிறாயா?" என்றது. இல்லை இல்லை, உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்" என்றது முதல் கரடி.

முதல்கரடி நண்பனுக்கு அறிவுரை கூறியதே தவிர, அதன் மனதினுள், தானும் வேகமாக ஏறி முதலில் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.இரண்டு கரடிகளும் மிகவும் வேகமாக ஏறியதால் நிதானமிழந்து கீழே விழுந்தன. வலியால் துடித்து முனங்கின. "நான் சொன்னதைக் கேட்டிருந்தா இந்த நிலைமை வந்திருக்குமா?" என்று முதல் கரடி கேட்டது. என்னைச் சொல்லிவிட்டு நீயும் வேகமாகத் தானே ஏறினாய் என்றது இரண்டாம் கரடி. இருவர்மீதும் தவறு உள்ளதை உணர்ந்ததும் அடி "பலமா பட்டிருக்கா" என்றது முதல் கரடி. வலி தாங்க முடியலை, கண்ணில வேற அடிபட்டிருக்கு, ஒரு பக்கம் ஒன்னுமே தெரியலையே என்று முதல் கரடி கூறியதும், தனக்கும் அதேநிலைதான் என்றது முதல் கரடி. உடல் காயத்தைக்கூட விரைவில் ஆற்றிவிடலாம். கண்



பார்வை... என்று நா தழுதழுத்தது இரண்டாம் கரடி. இருக்கிற ஒரு கண் பார்வையில் சமாளிப்போம் என்று முதல் கரடி கூறியதும் எப்படிச் சமாளிப்பதாம்? எளிதில் சொல்லிட்ட என்றது இரண்டாம் கரடி. "வாழ்க்கையில் எல்லாவற்றையும் எளிமையா எடுக்கக் கற்றுக் கணும் என்று சொல்லிவிட்டு அவைதமது வேலைகளைச் செய்யத் தொடங்கின. நாட்கள் சென்றன. இரண்டாவது கரடி எப்போதும்போல மகிழ்ச்சியாக அனைத்து வேலைகளையும் செய்து வந்தது. அதன் மகிழ்ச்சியைப் பார்த்த மற்றக்கரடி குமுறியது. தன் நண்பனைப் பார்த்து, உனக்கு 2 கண்களும் தெரிகிறதா? என்றது.

ஏன அப்படிக் கேட்கிற? என்றதும், உன்னைப் பார்த்தால் ஒரு கண் தெரியாதது போலத் தெரியலையே என்றது. உடனே இரண்டாம் கரடி, உனக்கும் எனக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான் உள்ளது என்றது. என்ன வித்தியாசம் என்றதும், நீ உன் இழப்பை ஒவ்வொரு வினாடியும் கவலையுடன் பார்க்கிறாய். நான் என் இழப்பினை எப்படிச் சரி செய்வது என்ற அக்கறையுடன் பார்க்கிறேன் என்றது. நான் கவலைப்படுகிறேனா? என்று முதல் கரடி கேட்டதும், ஆமா, உன் சோர்வுக்குக் காரணம் உனது கவலைதான் என்றது. எப்படிக் கவலைப்படாமல் இருப்பதாம் என்று முதல் கரடி கேட்டதும், கவலைப்பட்டாலும் கண் வரப்போவதில்லை. எனவே, என் செயல்கள் ஒவ்வொன்றையும் திட்டமிட்டுச் செய்கிறேன். எதிர்காலம்பற்றிச் சிந்திக்கிறேன்.

நம் இழப்பு, அதனால் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், சோகம், தோல்வி போன்றவற்றைக் கவலையுடன் பார்க்கக் கூடாது. அக்கறையுடன் பார்க்கப் பழகிக் கொண்டால் தடையிலிருந்து எளிதில் மீளலாம் என்றது.

## பள்ளி செல்வோம்!


பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் கிடைத்தாச்சு!
துள்ளிக் குதித்து நாள்தோறும்
பள்ளி செல்வோம் தோழர்களே!

காலை நேரம் படித்திடலாம்
கல்வியில் தேர்ச்சி
அடைந்திடலாம்!
மாலை நேரம் ஓடிடலாம்
மகிழ்வாய் உடலைப் பேணிடலாம்!

ஒழுக்கம் என்பதை மூச்சாக
உண்மை என்பதைப் பேச்சாக
பழக்க மாக நாம்கொண்டால்
பெரியார் போல வாழ்ந்திடலாம்!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் கிடைத்தாச்சு!
துள்ளிக் குதித்து நாள்தோறும்
பள்ளி செல்வோம் தோழர்களே!

## சிரிக்கலாம் வாங்க



"அந்த லிப்ட் ஆப்ரேட்டர் அடிபட்டு ஆஸ்பத்திரியில இருந்தாரே, இப்ப எப்படி இருக்கார்?"

'படிப் படியா' முன்னேறிட்டு இருக்கார்!'

'உங்கப்பா தொழில்ல நிறைய முத்திரைகள் பதிச்சவரா' என்னவா இருக்கிறார்?"

'தபால்காரரா இருக்கார்!"

'என்ன தம்பி, 'நன்றி"ன்னு எழுதினதுக்காகவா பெயில் ஆக்கிட்டாங்க..?'

'பரீட்சை பேப்பரில கடைசியிலே 'என் பக்கத்தில் இருந்த பையனுக்கு நன்றி"ன்னு எழுதினேன்!'

ஒரு கேள்வியையும் விடக் கூடாதுன்னு சொன்னதுக்கு இப்படியாடா பண்ணுவ?

என்னாச்சுங்க டீச்சர்


கேள்வித்தாளில் உள்ளது போலவே, எல்லா கேள்வியையும் அப்படியே விடைத்தாளில் எழுதியிருக்கியேடா"

## உலகப் புகழ் ஓவியர்

லூகாஸ் கிரனாச் தி எல்டர்.

(Lucas Cranch the Elder)
(கி.பி. 1472 -1553)





# மக்களின் தேவைகளை அறிந்து செயலாற்றுபவர் சந்திரகுமார் எம்.பி.

## பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.ச.தலைவர் தெரிவிப்பு



கிளிநொச்சி மக்களின் தேவைகளை அறிந்து சேவையாற்றுபவர் எமது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார். இவர் என்றும் கிளிநொச்சி பளை மக்களுடன் ஒன்றித்து வாழ்பவராகவே இருக்கின்றார். என பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தியாகராசா தெரிவித்தார்.

அண்மையில் சோரன்பற்று பாடசாலையில் இடம்பெற்ற சோரன்பற்று கிராம மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் மத்தியில் மக்கள் பிரதிநிதிகள் என கூறிக்கொண்டு சிலர் உலாவி வருகின்றனர்.அவாகள் எப்பொழுதும் வரும் மாதம் விதைப்பு என்றால் இம்மாதம் உழவுக்கு இறங்குபவர்கள் போன்று தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன் மக்கள் பகுதிகளுக்குள் இறங்கி மக்களின் உணர்வுகளை தூண்டி வாக்குகளைக் கொள்ளை யடிதததுக்கொண்டு சென்றுவிடுவார்கள் அப்படிச் செல்கின்றவர்கள் அடுத்த பருவமழைக்கு முன் வயலுக்குள் இறங்குபவர்கள் போன்றே மீண்டும் மக்களிடம் வருவார்கள்.

ஆனால் இதற்கெல்லாம் நேர் எதிர்மாறாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் எப்பொழுதும் மக்கள் மத்தியில் அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் அறிந்து நிவர்த்தி செய்து வருவதோடு மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அந்த வழியில் எமது மக்களுக்கு தனது பணியினை மேற்கொண்டு வருகின்றார். எனத்தெரிவித்தார்.

சோரன்பற்று கமக்கார அமைப்பின் தலைவர் பேரம்பலம், தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், இராசதுரை, பிரதேச கிராம சேவையாளர் நிமலகாந்தன், பச்சிலைப் பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தியாகராசா, பிரதேச சமூக சேவையாளர் தர்மலிங்கம், கரந்தாய் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சத்தியசீலன், சோரன்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கனகலிங்கம், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# இலக்கிய படைப்பாளிகளிடமிருந்து விருதுக்கு படைப்புக்கள் கோரல்

(யாழ். நிருபர்)

கு.சின்னப்பாரதி இலக்கிய அறக்கட்டளையின் 6ஆம் ஆண்டு விருதுக்கு இந்தியா, இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் இலக்கியப்படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன.

நாமக்கலைத் தலைமையகமாகவும், டாக்டர் பொ.செல்வராஜாவைத் தலைவராகவும் கொண்டு செயறபடும் கு.சின்னப்பாரதி இலக்கிய அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி சிறந்த படைப்பாளிகளுக்கு முதன்மை விருதுடன் ஒரு இலட்சம் ரூபா ரொக்கப்பணமும், சிறந்த நூல்களுக்கான இலக்கிய விருதுகளாக பத்தாயிரம் ரூபாவும் கேடயமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

நாவல், கட்டுரை, சிறுகதை, மொழிபெயர்ப்பு ஆகிய நான்கு பிரிவுகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

படைப்புகள் முதல் பதிப்பாக இருப்பதுடன் 2011 ஜனவரி முதல் 2013 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் வெளிவந்திருக்க வேண்டும் படைப்புக்களின் இரண்டு பிரதிகளை விண்ணப்பத்துடன் ஆகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்பாக சி. ரங்கசாமி 6175 கே.ஜி.போஸ் அஞ்சல் நகர் நல்லிப்பாளையம் (வழி) நாமக்கல் 637003 தமிழ்நாடு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். (10)

# வலிகாமம் வலயமட்ட வணிகப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய கோட்ட மட்ட வணிகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரை** சண்டிலிப்பாய் பிரிவு - I

ஆ.நேமெலா, ம.அன்ரன் டிரோசன் (யா/ஆனைக் கோட்டை றோ.க.த.க.பாடசாலை) ம.ஆதிரை (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

பிரிவு - II

தி.திரிசனா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), ந.துஷாகினி (யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.) சி.தீபிகா (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

பிரிவு - III

து.லக்சியா (யா/பண்டத்தரிப்பு மகளிர் உ.த.பாடசாலை), செ.கவிந்திகா (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சி.விதுசனா (யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி.)

சங்கானை பிரிவு - I

ம.சரண்யா(யா/வட்டு இந்துக்கல்லூரி), அ.அஜிதா (யா/வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி), க.வித்தியா (யா/ வட்டு மத்திய கல்லூரி)

பிரிவு - II

நா.ஜெசிந்தன், பா.தனுஷா (யா/வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி), த.அனுஜா (யா/மூளாய் சைவப் பிரகாச வித்தி)

பிரிவு - III

தி.அனுயா (யா/வட்டு இந்துக்கல்லூரி), ச.ஜசிந்தா, ப.விதுஷா (யா/ விக்ரோறியாக்கல்லூரி)

(தொடரும்...)



மல்லாவி நகரத்திற்கான கழிவு நீர் வாய்க்கால் வேலைகள் நடைபெற்று வருவதைக் காணலாம். (140)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஐ.நா. மனித உரிமைக் கழகம் நடத்தவுள்ள சர்வதேச விசாரணை தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுத் தரும் என்று, அதைப் பற்றி வாயோயாமற் பேசிய எல்லோருக்கும் இப்போது அதன் உள்நோக்கங்கள் தெளிவாகத் தெரியும். சிலர் தயங்கித் தயங்கி அந்த உண்மையை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனாலும் இந்த விசாரணை என்பது தமிழ் மக்களை ஏய்த்து ராஜபக்ஷ ஆட்சியை மிரட்டிப் பணியவைக்கும் ஒரு நாடகம் மட்டுமே என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் திராணி அவர்கட்கு இல்லை. இந்த நாடகத்தில் முக்கிய பங்கேற்கும் நவநீதம்பிள்ளை முதல் விசாரணைக் குழுவினர் வரை, ஒவ்வொருவருக்கும் நாடகத்தில் தமது வகிபாகம் என்ன என்பது பகுதி தெரியும், பகுதி தெரியாது.

சிலருக்கு ராஜபக்ஷ அரசாங்கமோ அதன் முக்கிய பிரமுகர்களோ தண்டிக்கப்படின் அதுவே போதும். ஐ.நா.வும் அமெரிக்காவும் சேர்ந்து தமிழர்களை உய்விக்கும் என்று வேறுசிலர் கதையளந்தாலும், இந்த விசாரணை ராஜபக்ஷ ஆட்சியை வன்மையாக கண்டித்து ஒரு அறிக்கையை விடுத்தால், அது அவர்கள் அடுத்த தேர்தலைச் சந்திக்கப் போதிய ஊட்டத்தை வழங்கும் என்று அறிவார்கள்.

ஐ.நா. மனித உரிமைக் கழகத்தின் நம்பகத்தைக் காக்க விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் விசாரணை அறிக்கை பேசும். இலங்கை அரசாங்கம் தண்டனைக்குரியது என்று ஒரு முடிவு அறிவிக்கப்பட்டால், விடுதலைப் புலிகள் இப்போது ஒரு அமைப்பாக இல்லாததால், விடுதலைப் புலிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்தவர்கள் தண்டனைக்குரியவர்களாக மாட்டார்களா? அரசாங்கத்தின் போர்க் கொடுமைகளை ஆதரித்து, நியாயப்படுத்திஅவ்வாறு நியாயப்படுத்த இயலாதபோது மூடிமறைத்த யாவரும் குற்றவாளிகளே. அவ்வாறே விடுதலைப் புலிகள் அப்பாவி மக்களைத் துன்புறுத்தியபோது மௌனங்காத்தோரும் நியாயப் படுத்தியோரும் குற்றவாளிகளே. **– கோகர்ணன்**

எவ்வாறு தான் கூறப்பட்டாலும் மனித உரிமைகள் பேரவையின் கீழான சர்வதேச விசாரணை அமெரிக்க மேற்குலகத் தேவைகளை நலன்களை உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சி நிரல் மட்டுமே. இதில் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வோ இழப்புகளுக்கான போதிய நிவாரணங்களோ இருக்க மாட்டாது. இலங்கைத் தமிழர் தலைகளில் மற்றொரு வகை மிளகாய் அரைக்கும் நிகழ்ச்சியேயாகும். அதன் போது தமிழ் மக்கள் தலைகளை ஆட்டி அசைக்காது இருப்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடமையாகக் கண்காணிக்கும். அவ்வளவுதான். அதற்கப்பால் எதுவுமே இல்லை. தமிழ் மக்கள் உண்மைகளைக் காண மறுக்கும் வரை இவை புதுப்புது வடிவங்களில் இடம்பெறவே செய்யும். **– காலகண்டன்**

ரி.என்.ஏயினை உருவாக்கிய புலிகள், அரசியல் அடிமைத் தனத்துக்கு தலை தாழ்த்தியதுடன் அத்தகைய அடிமைப்பண்பு நன்கு பிரசித்தமாவதையும் உறுதிப்படுத்தினார்கள். ரி.என். ஏயினை அடிக்கடி கிளிநொச்சிக்கு வரவழைத்து அங்கு வைத்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்செல்வன அவர்களுக்கு அறிவுறுத்தல்களையும் மற்றும் கட்டளைகளையும் வழங்கினார்.

பாராளுமன்றத்தில் ரி.என்.ஏ ஒரு பரிதாபகரமான கூட்டமாக இருந்தது. சம்பந்தனையும் மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் தவிர வேறுயாரும் பயனுள்ள பங்களிப்பு எதையும் வழங்கவில்லை. அநேகமான ரி.என்.ஏ அங்கத்தவர்கள் மோசமாகவும் எரிச்சலூட்டும் வகையிலும் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டார்கள். அவர்களில் எம்கே சிவாஜிலிங்கம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மிகவும் மோசமான பெயரைப் பெற்றிருந்தார்கள். இவை அனைத்தினதும் மொத்த விளைவாக நம்பகத்தன்மை மற்றும் மரியாதை என்பனவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் சமூகமும் ரி.என்.ஏயினை அவமதிப்பு மற்றும் வெறுப்புடனேயே பார்த்தது. ரி.என்.ஏ தூதுக்குழு புதுடில்லிக்கு வழமையான யாத்திரைகளை மேற்கொண்ட போதிலும் அதற்கு அற்ப மதிப்பே வழங்கப்பட்டது. ரி.என்.ஏயினை புலிகளின் ஒரு இணைப்பாக பார்த்தார்களே தவிர வேறெதுவும் இல்லை.

2009ல் எல்.ரீ.ரீ.ஈ அழிக்கப்பட்ட பின்னர், அநேகர் நம்பியது ரி.என்.ஏ கடந்த காலத்திலிருந்து மீண்டு ஒரு புதிய தொடக்கத்தை பெறும் என்று. எனினும் அது நடக்கவில்லை. முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சிவி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாணசபைக்கு முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் புலிப்பாட்டு பாட ஆரம்பித்ததுதான் இவை அனைத்தையும் விட எம்க்கு கிடைத்த மிகப்பெரும் ஏமாற்றம். **– டி.பி.எஸ்.ஜெயராஜ்**

# மக்களை மூளைச் சலவை செய்ய உலக நாடுகள் சில முயற்சிக்கின்றன

## என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

வெளிநாட்டு சக்திகள் இலங்கை மக்களை மூளைச் சலவை செய்ய முயற்சிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் போர்வையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஊடாக இலங்கை மக்களை மூளைச் சலவை செய்ய சில நாடுகள் முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்,

அதிகளவு பணத்தைச் செலவிட்டு இலங்கை மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.


எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து வெளிநாட்டு சக்திகளின் பாடங்கள் இலங்கை மக்களுக்கு அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களுக்கு தெளிவாகத் தெரியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்தும் மக்களுக்கு தெளிவாகத் தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அரசாங்கத்தை கவிழ்ப்பதே இந்த



வெளிநாட்டு சக்திகளின் பிரதான நோக்கமாகும் என அவர் தெரிவித்துள்ளார்

# விமானப்படைத் தளபதி சீனா விஜயம்



விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கோலித்த குணதிலக்க அண்மையில் மேற்கொண்ட சீன விஜயத்தின் போது அந்நாட்டு இராணுவ ஆளணித் தலைவர் ஜெனறல் மஷியோ ஷெ யினை சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளின் இராணுவங்களுக்கிடையில் நல்லுறவை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடினர். இரு பிரதானிகளும் இச்சந்திப்பின் போது நினைவுச் சின்னங்களை பரிமாறிக்கொண்டனர்.

இவ்விஜயத்தின் பின்னர் இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் கோலித்த குணதிலக்க சீனாவின் பிரதான விற்பனை நிறுவனம்- விமானங்கள் மற்றும் பாதுகாப்பு உற்பத்தி தொடர்பான முன்னணி நிறுவனமான சீன தேசிய விமான தொழில்நுட்ப ஏற்றுமதி இறக்குமதி கூட்டுத்தாபனத்திற்கு விஜயம் செய்தார்.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களில் பெரும்பாலானவை குறித்த நிறுவனத்திலிருந்தே உற்பத்தி செய்து அனுப்பப்படுகின்றன. இலங்கை விமான்ப்படைக்கும் குறித்த நிறுவனத்திற்கும் இடையில் நீண்டகாலமாக உறவு காணப்படுகின்றனமை குறிப்பிடத்தக்கது.

# மத்தள வானூர்தி நிலையத்தால் ஒரு கோடி டொலர் வருமானம்

(கொழும்பு)

கடந்த 15 மாத காலப்பகுதியினுள் மத்தள சர்வதேச வானூர்தி நிலையத்தின் ஊடாக ஒரு கோடி அமெரிக்க டொலர் வருவாய் பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த வானூர்தி நிலையத்தில் ஏ380 மற்றும் ஏ.என்.225 ரக பாரிய வானூர்திகள் இறங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்காரணமாக, மத்தள வானூர்தி நிலையத்துடன், சர்வதேச முன்னணி வானூர்தி நிறுவனங்கள் தொடர்பை வைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்தைக் கொண்ட இந்த வானூர்தி நிலையத்தின் ஊடாக இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்கு பிராந்திய வர்த்தக மற்றும் அபிவிருத்தி நடவடிககைகள் மேம்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் இதுவரை உற்பத்திப் பணிகள் இல்லை

## ஆனந்த பாலித்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என் அதிகாரிகள் தெரிவித்திருந்த போதும் இதுவரை எந்தவித உற்பத்திப் பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனியவள கூட்டுத்தாபனத்தின் தேசிய சங்கத்தின் பொது செயலாளர் ஆனந்த பாலித்த இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், தற்போது மூன்று கப்பல்கள் எரிபொருளை இறக்குமதி செய்யும் நோக்கில் தரித்திருப்பதாக தெரிவித்தார். மேலும் ஒரு கப்பல் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வரவுள்ளது.

சுத்திகரிப்பை மேற்கொள்ள முடியாமல் பாரியளவு மசகு எண்ணெய் இருப்பில் உள்ளதுடன், இறக்குமதி செய்து கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.இந்தநிலையில் நான்கு தினங்களில் சுத்திகரிப்பை மேற்கொள்ள முடியும் என அதிகாரிகள் தெரிவித்த போதும், எந்தவித பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கனிய வளத்துறை கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவர் எஸ்.அமரசேக்ர தெரிவிக்கையில்,

நிறுத்திவைக்கப்பட்டிருந்த சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவித்தார் .இதனபடி, கிரமமாக எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# இளநீர் மற்றும் தேங்காய் மட்டை 90 வீதம் 'வீணடிக்கப்படுகிறது

ஒதுக்கப்படும் தேங்காய் மட்டை மற்றும் இளநீர் என்பவற்றை வருமானம் தரும் பொருட்களாக மாற்ற முடியும் என்று தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் அருண குணதிலங்க அரசாங்கத் தகவல் திணைக் களத்திற்கு தெரிவித்தார்.

இலங்கையில் சேகரிக்கப்படும் தேங்காய் மட்டைகளில் 45 வீதம் மட்டுமே தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்றன. 90 வீதமானவை பயனற்றவகையில் வீணாக்கப்படுகின்றன.

எனினும் 80 வீதமானவை தெங்கு முக்கோணப்பிரதேசங்களுக்கு அண்மையிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்றன. ஒதுக்கப்படும் தேங்காய் மட்டைகளை பயனுள்ள வகையில் மாற்றுவதற்கான பாரிய திட்டமொன்றை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை முன்னெ்டுக்கிறது. தேங்காய் மட்டையுடன் தொடர்புபட்ட பல்வேறு கைத்தொழில்களினூடாக மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக சலுகையடிப்படையில் உபகரணங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று கொப்பரா தேங்காய் மற்றும் இளநீர் என்பன அதிகளவில் வீணாகின்றன.

அவற்றினூடாகவும் பணம் சம்பாதிக்க முடியும். இளநீர் ஏற்றுமதி செய்வதற் கான தனியார் கைதொழில்கள் சில அடையாளங்காணப்பட்டுள்ளன. 'இனி வரும் காலங்களில் அதிக இளநீரை ஏற்றுமதிச் செய்ய நாம் எதிர்பார்த்துள்ளோம்.

சர்வதேச வியாபரச் சந்தையில் ஒரு லீற்றர் இளநீர் 2.50 அமெரிக்க டொலருக்கு விலை போகிறது என தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# பிரித்தானிய பிரஜை கொலை மேன்முறையீடு செய்ய ஏற்பாடு

(கொழும்பு)

தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் விதான" பத்திரன மேன்முறையீடு செய்ய உள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன் பிரஜை குர்ஹாம் ஷெய்க் படுகொலை வழக்கு தொடர்பில் சம்பத் உள்ளிட்ட நான்கு பேருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 20 வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் முயற்சியில் சம்பத் ஈடுபட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.தண்டனை விதிக்கப்பட்ட சம்பத் வெலிக்கடைச் சிறைச்சாலையின், விசேட தண்டனைகள் விதிக்கப்பட்ட ஏ3 சிறைக் கூடத்தில் தண்டனை அனுபவித்து வருகின்றார்.

மேன்முறையீடு செய்தால் வெலிக்கடைச் சிறைச்சாலையின் எச் மற்றும் எல் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் சம்பத் தடுத்து வைக்கப்படுவார் என அறிவிக்கப்படுகிறது.

இவை சாதாரண கைதிகளை தடுத்து வைக்கும் சிறைக் கூடங்களாகும்.ஷெய்க் கொலை வழக்கு மற்றும் தண்டனைகள் தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்படும் என பிரிட்டன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லிபியா செல்வதற்கு அனுமதி வழங்கப்படாது

லிபியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை இலங்கையை சேர்ந்த எந்த தொழிலாளர்களுக்கும் அங்கு செல்ல அனுமதி வழங்கப்படாது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

லிபியாவில் தற்போது சுமார் 500 இலங்கை தொழிலாளர்கள் தொழில் புரிந்து வருகின்றனர். இவர்கள் அனைவரையும் பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் லிபியாவில் தொழில் புரிந்து வந்தவர்களில் 14 பேர் நேற்று முன்தினம் எகிப்தின் கெய்ரோ நகரில் உள்ள இலங்கை தூதரகத்தின் ஊடாக டுபாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நேற்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர் எனவும் அமைச்சர் டிலான் பெரேரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாக்க சிலர் முயற்சி

## பவித்திரா வன்னியாராச்சி தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்க சிலர் முயற்சித்து வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ரணில் விக்ரமசிங்க போன்ற மேற்குலக நாடுகளுக்கு அடிமைச் சேவகம் செய்யும் ஓர் தலைவரிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்து, புலிப்பயங்கரவாதத்தை மீள உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது.

நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்த ஜனாதிபதியின் கரங்களை மேலும் பலப்படுத்த வேண்டும்.

போர் வென்றெடுக்கப்பட்டு நாடு பொருளாதார ரீதியில் அபிவிருத்தியை எட்டி வரும் நிலையில், தமிழர் புலம்பெயர் சமூகத்தின் அழுத்தங்கள் காரணமாக சில மேற்குலக நாடுகள் இலங்கையில் மீளவும் பயங்கரவாதத்தை உருவாக்க முயற்சிக்கின்றன.அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இலட்சக் கணக்கான புலி ஆதரவாளர்கள் வாக்காளர்களாக



இருக்கின்றார்கள்.

அந்த நாடுகளின் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் புலி ஆதரவாளர்களுக்கு பங்கு உண்டு.எனவே மேற்குலக நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன என பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

22. குமரன் தனது வீட்டிலிருந்து காலை பாடசாலை செல்லும் போது சூரியன் அவனது வலது கைப்பக்கத்தில் தோன்றியது. ஆயின் அவன் பாடசாலை சென்ற திசை எது?

........................................

23. பாடசாலையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட பெற்றோர்களில் காற்பங்கினர் ஆண்கள். வந்த பெண்களின் எண்ணிக்கை 180 ஆயின் வந்த ஆண்களின் எண்ணிக்கை.

........................................

24. ஒரு பாடசாலையில் நடைபெற்ற சிரமதான நிகழ்வு ஒழுங்கு மாறி அமைந்துள்ளது. இதனை ஒழுங்குபடுத்தி அமைக்கும்போது நடுவில் வரும் வாக்கியம்.

A. பாடசாலை சுத்தமாகக் காட்சியளித்தது.

B. எங்கள் பாடசாலையில் சிரமதானம் நடைபெற்றது

C. சிரமதானத்தில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்

D. தலைமை ஆசிரியர் அனைவருக்கும் நன்றி கூறினார்

E. பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் சுற்றாடலைச் சுத்தம் செய்தனர்.

1. A　　2. E　　3.D

25. தரப்படும் நேர ஒழுங்குகள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி எழுதும்போது விடையாக அமைவது

A. மணித்தியாலம்

B. நிமிடம்

C. செக்கன்

D. நாள்

E. வாரம்

1). EADCB　　2). CBADE　　3). CABDE

26. மார்ச் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை எனின் எப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரும் கிழமை

1. செவ்வாய்　　2. புதன்　　3. வியாழன்

27. வடக்கு நோக்கி செல்லும் ஒருவனின் நிழல் அவனது இடது கைப்பக்கம் விழுந்தது எனின் அவன் செல்லும் நேரம்

1. காலை　　2. மாலை　　3. மதியம்

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014**　பகுதி - I　1 மணி 15 நிமி



# கல்வி முரசு


◆ சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

1. தரப்படும் பந்தி மூலம் விபரிக்கப்படும் பிராணி

> இது ஒரு தாவர உண்ணி. துருவப்பகுதியில் வாழும் ஒரு விலங்கு. இதன் உடல் நிறம் கறுப்பு வெள்ளை. பஞ்சுபோன்ற மென்மையான உடலமைப்புடையது.

1. கங்காரு.　　2. பென்குயின்.　　3. பண்டா.

2. படத்தில் உள்ள விலங்கை விபரிக்கும் சரியான கூற்று.



1. முலையூட்டி, விவசாயி, உணவு.
2. இடம்பெயரும், வளர்ச்சியடையும், இனத்தைப்பெருக்கும்.
3. தாவரஉண்ணி, மூலிகை, அதிசயமானது.

பாடலை வாசித்து கேட்கப்படும் வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

அம்புஜம் வாடித் தளர்ந்ததம்மா – அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பிதம்மா மதிக்கின்னார்
இனியாரும் உண்டோ அம்மா.

3. அம்புஜம் என்பதன் கருத்து


1. தாமரை　　2. நீலோற்பலம்　　3. அல்லி

4. ஆம்பல் களிப்பதற்கான காரணம் என்ன?


1. சூரியனின் வருகை கண்டு　　2. சந்திரனின் வருகைகண்டு
3. சந்திரன் மறைவதைக் கண்டு

◆ முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க

5.　　1.　　2.　　3.



6.



1. 2. 3.


7. மதுரன் பொதுஅறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒருநாள் அவனது நண்பன் கேட்ட பொதுஅறிவுக் கேள்விக்கு அவனால் விடையளிக்க முடியவில்லை. இந்நிகழ்விற்குப் பொருத்தமான விடையாக அமைவது
   1. நிறைகுடம் தளம்பாது
   2. ஆனைக்கும் அடி சறுக்கும்
   3. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

8. "இரக்கப் போனாலும் சிறக்கப் போ" என்பதன் கருத்து
   1. வாழ்க்கையில் முயற்சியுடன் வாழ வேண்டும்
   2. பிச்சை எடுக்கப் போகும்போது அழகாகச் செல்லல்
   3. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்


9. "காலைவாரி விடுதல்" என்பதன் கருத்து
   1. ஒருபொழுதும் உதவ முன்வருவதில்லை.
   2. பொறுத்த நேரத்தில் உதவிசெய்வதில்லை.
   3. கால் உழைவுபோக்க காலை பிடித்துவிடுதல்.

10. வானத்து உடுக்களை எண்ணிவிட முடியுமா? இங்கு உடுக்கள் என்பது
   1. முகில்கள் 2. பறவைகள் 3.நட்சத்திரங்கள்

11. சரஸ்வதி வித்தியாலயத்தின் அமைவிடத்தைக் காட்டும் சரியான ஒழுங்கு





1. 2. 3



12. ஒரு பாடசாலையிலுள்ள ஆண், பெண் மாணவர்களைக் குறிக்கும் உருவாக அமைவது

1. 2. 3.



13. விவசாயிகளின் நண்பன் என்று பின்வருவனவற்றில் குறிப்பாக எதைக்கூறுவீர்
   1. நத்தை. 2. மண்புழு 3. கிளி

14. அதிக அளவு நீர் தேவைப்படும் பயிர்களில் ஒன்று பின்வருவனவற்றில்....
   1. வாழை. 2. பயறு. 3. நெல்.

15. பழப்பாகு செய்வதன் மூலம்
   1. பழங்களை பாதுகாக்கலாம் .
   2. உணவாக நீண்டநாட்கள் பயன்படுத்தலாம்
   3. பழங்கள் அழுகிப்போகாமல் பாதுகாக்கலாம்

16. வீட்டுத்தோட்டத்தில் வளரக்கூடிய தாவரமல்லாதது.
   1.தவசி முருங்கை 2. காஞ்சூரை. 3.கற்பூரவள்ளி

17. ஒரு சிறுவன் தன்னிடம் இருந்த 400ml குளிர்பானப் போத்தலில் இருந்த குளிர்பானத்தில் அரைவாசியைக் குடித்தான். மிகுதியின் அரைப்பங்கை தன் நண்பனுக்குக் கொடுத்தான். மிகுதியாக உள்ள குளிர்பானத்தின் கனவளவு
   1. 50 ml 2. 100 ml 3. 125 ml

18. பின்வருவோரில் பிறர் உதவி அதிகம் தேவைப்படுபவர் யாராக இருக்கும்.
   1. செவிப்புலன் அற்றோர் 2. விழிப்புலன் அற்றோர் 3. மந்த புத்தியுடையோர்

19. தென்னை மரங்கள் அதிகமாக வளரும் இடங்கள்.
   1.வரண்ட பிரதேசம் 2.மலைநாடு 3.கடற்கரைப்பிரதேசம்


20. கரப்பந்தாட்டம் நடைபெறும்போது ஒரு அணியில் விளையாடுபவர்களின் எண்ணிக்கை.
   1. 5 2. 6 3. 7

21. 8, 7, 4, 9 இவ்வெண்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுங்கள்


விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2014 - கல்விமுரசு

# சாவகச்சேரி-விளைவேலி ஸ்ரீ துர்க்கா தேவியின்

## ஆறாம் நாள் உற்சவம் இன்று



அருள வேண்டும் தாயே
அங்கயற்கண்ணி- நீயே எமக்கு
அருள வேண்டும் தாயே

பொருளும் புகழும் பொருந்தி வாழ
புவியில் நாம் தலைசிறந்து வாழ
அருள வேண்டும்- தாயே
கலைகள் கற்கவும் கற்பனை செய்யவும்

காலங் கடவாமல் கருத்தைத் திருத்தவும்
உலகிலே நல்ல உண்மைகள் பேசவும்
உனை நினைக்கவும் உறுதியாய் வாழவும்
அருள வேண்டும் தாயே

*சி. ஆதிரை*
*கல்வயல்*

# அனர்த்த முகாமைத்துவ பிரிவினூடாக பாடசாலைகளுக்கு குடிநீர் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை கல்விக் கோட்டப் பிரிவிற்குட்பட்ட 11 பாடசாலைகளுக்கு நாளாந்தம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கண்டாவளைக் கோட்டக் கல்வி அதிகாரி வி.இராஜகுலசிங்கம் நேற்று திங்கட்கிழமை தெரவித்தார்.

கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் 24 பாடசாலைகள் இருக்கின்ற நிலையில் அவற்றில் குடிநீர்த் தேவையுள்ள 11 பாடசாலைகளுக்கு நாளாந்தம் 6,500 லீற்றர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் குடிநீர் வழங்கும் நடவடிக்கையிலேயே மேற்படி 11 பாடசாலைகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது நிலவும் கடும் வறட்சியான கால நிலையால் நீருக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் நீரைப் பெறுவதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நேக்கி வருகின்றனர்.

இதில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளக கிராமங்களில் குடி நீரின்றி மக்கள் பரிதவிக்கும் அவல நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முன்னெடுக்கப்படும் குடிநீர் விநியோகம் நன்மையளிப்பதாக பெற்றோர்களும் மாணவர்களும் பாடசாலை சமூகத்தினரும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

# முருகமூர்த்தி ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் கோயில் குடியிருப்பு சந்தன முதலிச்சி புலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

துவாதசி திதியும், ரோகினி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில முற்பகல் 10 மணிக்கு இவ் வெள்ளோட்ட விழா இடம் பெறவுள்ளது.

இச்சித்திரத்தேர் மட்டுவில் ஓம் சக்தி சிற்பாலயம் சிற்ப கலாமணி சின்னத்தம்பி மகேந்திரராசா குழுவினரால் அமைக்கப் பட்டுள்ளது.

தொடர்ந்து பகல் 10 மணிக்கு சிற்பக் கலா மணிக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் ஆசியுரையை கலாநிதி தேசமான்ய சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார். (இ)

# தாலிக்குளம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வவுனியா)

வவுனியா தாலிக்குளம் கிராமத்தில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினால் இரண்டாம் கட்டமாக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவரும் முன்னாள் நகர சபை உறுப்பினருமான தேசமான்ய.சு.குமாரசாமி, ஒன்றியத்தின் செயலாளர் கு.சஜிக்குமார், மக்கள் ஒன்றியத்தின் தாலிக்குளம் கிராம அமைப்பாளர் திருமதி.சிந்துஜா, மக்கள் ஒன்றிய ஆதரவாளர் மயூரன், ஆங்கில ஆசிரியை திருமதி. லீலாவதி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (70)

# கிளிநொச்சியில் வீசிய கடும் காற்றில் பறந்தன பாடசாலை கொட்டகைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் கிருஷ்ணபுரம் ராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகியனவற்றில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு தற்காலிக கொட்டகைகள் நேற்று முன்தினம் வீசிய கடும்காற்றினால் முற்றாக சேதமடைந்துள்ளன.

ஓலைகள் மற்றும் தகரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த இரண்டு கொட்டகைகளும வீசிய கடும் காற்றினால் சேதமடைந்தன. பாடசாலைகளில் இரண்டாம் தவணைப்பரீட்சை நடைபெற்று வரும் நிலையில் குறித்த பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவுள்ள ஒழுங்குகள் குறித்து கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவிக்கையில்

மாற்று நேர அட்டவணைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கான பரீட்சைகள் குறித்த தினத்தில் நடாத்தப்படும்.

கலைமகள் வித்தியாலயத்தில் சேதமடைந்த கொட்டகைக்கு பதிலாக புதிய கொட்டகையொன்று அமைத்துக் கொடுக்கப்படும்.ராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்களின் பரீட்சைகளை பாடசாலையை அண்மித்துள்ள வேறு பாடசாலையிலோ அல்லது கட்டங்களிலோ நடத்துவது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# பயனாளிகள் தெரிவும் சுயதொழில் கொடுப்பனவும்

வடக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களம் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவைச் சார்ந்த பின்வரும் பயனாளிகளுக்கு சுயதொழில் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது.

இப்பயனாளிகளை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளு மாறு பிரதேச செயலர் சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

பயனாளிகளின் விபரம் வருமாறு

சி.சறோஜினி (கம்பர்மலை), த.தயாழினி (கரணவாய் மேற்கு), உ.சிவகுமாரி (கரணவாய்), யோ.இராஜவிஜயமுண்டேஸ்வரி (கரவெட்டி வடக்கு), சி.இராஜேந்திரன் (கரவெட்டி தெற்கு), ந.கோடீஸ்வரன் (உடுப்பிட்டி), ந.லங்காதேவி (கரவெட்டி தெற்கு) (18)

# தோஷங்களை நிவர்த்தியாக்கும் ஆடிச்செவ்வாய் இன்று



தமிழ் மாதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறப்பு உள்ளது. எனினும் இவை அனைத்தைக் காட்டிலும் ஆடி மாதம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அந்தவகையில் இந்த ஆடி மாதத்தில் வரும் செவ்வாய், மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பெண்கள் விரதம் இருந்து அம்மனை வழிபட்டு வருவது காலம் காலமாக இருந்து வருகிறது. சிவனை அடையும் நோக்கில் அன்னை பராசக்தி இம்மாதத்தில் விரதம் இருந்து இறைவனின் இடப்பாகத்தை பெற்று அர்த்தநாரீஸ்வரியாகும் வரம் பெற்றார் என்று புராணங்களில் கூறப்படுகிறது. ஆடிச் செவ்வாய் விரதம் துர்க்கை, முருகனுக்குரிய விரதமாகும். முருகப் பெருமானின் அவதாரமே செவ்வாய்க் கிரகம் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. செவ்வாய்க் கிழமைகளில் இராகு காலத்தில் மாலை 3 மணி தொடக்கம் 4:30 மணி வரை உள்ள காலத்தில் அம்பிகையைப் பூசிப்பது விசேடமானது. பத்திரகாளி இராகுவாக அவதாரம் செய்தார் என்றும் கூறுவர்.

செவ்வாய் தோஷத்தாலும், நாகதோஷத்தாலும் திருமணம் தடைப்பட்டவர்கள், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் செவ்வாய்க் கிழமைகளில் இராகுகாலப் பூசைகளில் பங்குபற்றி வழிபடுவதால் தோஷம் நிவர்த்தியாகி திருமணப் பாக்கியமும், பிள்ளைப் பாக்கியமும் கிடைக்கும் என கூறப்படுகிறது. ஆடிச்செவ்வாயில் மட்டுமன்றி பொதுவாக செவ்வாய்க் கிழமைகளில் அம்பிகையை மட்டுமல்ல முருகப் பெருமானையும் வேண்டி விரதம் கடைப்பிடிப்பது பலன் தரக்கூடியது. விவாகத் தடைகள் நீங்கவும், செவ்வாய் தோஷம், நாகதோஷம் நிவர்த்திக்காகவும் இவ் விரத்தை அனுஷ்டிக்கின்றனர்.

"ஆடிச் செவ்வாய் தேடிக்குளி" என்ற பழமொழி ஒன்றே இவ் விரதத்தின் சிறப்பை உணர்த்துவதாக உள்ளது. காரணம் செவ்வாய் கிரகம் சனிக் கிரகம்போல் ஒரு ஜாதகருக்குப் பெரும் தோஷத்தை (கஷ்டத்தை) ஏற்படுத்தக் கூடியது. செவ்வாய், சனி போன்ற பாவக் கிரகங்கள் கோசாரமாக சஞ்சாரம் செய்யும் போது அவற்றின் கதிர் வீச்சுக்கள் ஜாதகரைத் தீவிரமாக தாக்குகின்றன. அதனால் அந்த ஜாதகர் உடல், உள ரீதியாக பெரும் பாதிப்பை பெறுகின்றார். தீய கிரகங்களில் இருந்து வரும் கதிர்கள் எமது உடம்பைத் தாக்க விடாது நல்லெண்ணை (எள் எண்ணெய்) தடை செய்கின்றது. தீய கதிர்கள் எம் உடலில் தாக்கத்தினை ஏற்படுத்தாது தடுக்கவே இந்த நல்லெண்ணை முழுக்கு என ஊகிக்க முடிகின்றது.

ஆடி செவ்வாய்க் கிழமைகளில் பெண்கள் எண்ணெய் வைத்து, மஞ்சள் பு,சிக் தோய்ந்து விரதம் அனுஷ்டித்து அம்மனை வழிபட்டு வந்தால் மாங்கல்ய பலம் கூடும், தோஷங்கள் நிவர்த்தியாகும், மாங்கல்ய தடை நீங்கும், பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

# "சக்திபீட நாதம்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்பாள் தேவஸ்தான "சக்தி பீடநாதம்" ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு இன்று இடம்பெறவுள்ளது.

ஆலய மண்டபத்தில் முற் பகல் 11 மணிக்கு பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் இவ் வெளியீடு இடம் பெறுகின்றது.

இதில் பேராசிரியர் நா.சண் முகலிங்கன் வெளியீட்டுரை நிகழ்த்துவதுடன் ஆய்வுரையை கலாநிதி ஆறுதிருமுருகன் நிகழ்த்துகிறார். தொகுப்புரையை வைத்தியக் கலாநிதி அ.ஜெயக் குமரன் ஆற்றுகின்றார்.

இந்நிகழ்வில் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ கணேச சபாபதிக் குருக்கள் சிற்பக் கலைஞர் க.புருஷோத்தமன், முதுபெரும் புலவர் பண்டிதர் வை.கா.சிற்றம்பலம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)

# காஸா மீது தாக்குதல் நடாத்த சர்வதேசத்தால் சட்ட அதிகாரம்

## இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு

காஸா மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு சர்வதேச ரீதியில் சட்ட அதிகாரம் கிடைத்துள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெட்டன் யாகூ தெரிவித்துள்ளார்.


காஸாவிலிருந்து எறியப் படும் ரொக்கட்டுக்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள் ளும் உரிமை தமக்கு இருப் பதாக குறிப்பிட்டுள்ள அவர், இதற் காக போராடி வரும் தமக்கு வலுவான சர்வதேச ஆதரவு கிடைத்து வருவதாக கூறியுள் ளார்.

இதேநேரம், காஸா மீது இஸ்ரேலிய தாக்குதல்கள் ஆரம பிக்கப்பட்டதன் பின்னர் மூன்றா வது தடவையாக நெட்டன் யாகுவுடன் தொலைபேசி மூலம் பேசியுள்ள அமெரிக்க ஜனா திபதியும் இஸ்ரேல் தம்மை தற் காத்துக் கொள்வதற்கான உரி மைகள் குறித்து பேசியுள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் அமைப்பு மேற்கொண்டு வரும் தாக்குதல்களை அவர் கண்டித் துள்ளதாக வெள்ளை மாளிகை அறிக்கையை மேற்கோள்காட்டி மத்திய கிழக்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காஸாவில் வெளிப்படை யாகவே மனிதப் படுகொலை கள் இடம்பெற்றுக் கொண்டி ருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச சட்டங்களை வலியு றுத்தும் அமெரிக்க போன்ற மேற்கத்தேய நாடுகள் மனிதத் துவத்திற்கு எதிரான இஸ்ரே லின் குற்றங்களை இன்னமும் கண்டு கொள்ளவில்லை.

மலேஷிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமைக்காக கவலை களை அள்ளிக் கொட்டி, அதற்கு எதிராக ரஷ்யாவை சாடி நட வடிக்கை எடுக்க முயன்று வரும




அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத் தேய நாடுகளுக்கு இந்த காஸா மாத்திரம் ஏன் கண்ணில் படுவ தில்லை என்றுதான் தெரிய வில்லை.

அமெரிக்கா சார்பு உக்ரைன் அரசாங்கத்திற்கு எதிராக செயற பட்ட ரஷ்ய சார்புள கிழக்கு உக் ரைன் கிளர்ச்சியார்கள் மீதும், இஸ்ரேலுக்கு எதிராக போரா டும் ஹமாஸ் தரப்பின் மீதும் அமெரிக்காவின் விரல் நீள்கின் றது.

ஜனநாயகத்தை விரும்பும் நாடு என்று தம்மை காட்டிக் கொள் ளும் இவ்வாறான நாடுகள் தமக்கு எதிரான நாடுகள் மற் றும் மக்களின் ஜனநாயகம் குறித்து கண்டு கொள்வதே இல்லை. ஏனத் தெரிவிக்கப் படுகிறது.

# இளவரசர் ஜோர்ஜிக்கு முதலாவது பிறந்த நாள்



(லண்டன்)

இங்கிலாந்து அரச குடும்பத்தின் இளைய வாரிசான, இள வரசர் ஜோர்ஜ், இன்று, தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார். அதற்காக, கென்சிங்டன் அரண்மனையில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கிலாந்து இளவரசர் வில்லியம், கேட் மிடில்டன் தம்பதிக்கு கடந்த ஆண்டு, ஜூலை 22 ஆம் திகதி இளவரசர் ஜோர்ஜ் பிறந்தார்.

லண்டன் நகரில் முதல் பிறந்த நாளை கொண்டா டும் ஜோர்ஜை கௌரவிக்கும் வகையில், லண்டன் பத்திரிகைகள், அக்குழந்தையின் படத்தை, முதல் பக்கத்தில் வெளியிட்டு, இராஜ விசுவாசத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

# மோடி பதவியேற்பு விழாவுக்கு 17 இலட்சம் ரூபா செலவு

(புதுடில்லி)

பிரதமர் நரேந்திர மோடியும், அவரின் அமைச்சர்களும் பதவியேற்ற விழாவுக்காக, அரசு தரப்பில், 17 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்ட தாக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியும், அவரின் அமைச்சர்களும், கடந்த மே மாதம், 26ஆம் திகதி பதவியேற்றனர். இந்த விழா, டில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் நடந்தது.இந்த விழா வுக்கு செலவிடப்பட்ட தொகை குறித்த தகவல்களை தெரிவிக் கும்படி, ஜனாதிபதி செயலகத்துக்கு ரமேஷ் வர்மா என்பவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்தார்.

இதற்கு அளிக்கப்பட்டுள்ள பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பதவியேற்பு விழாவுக்கு 4,017 விருந்தினர்கள் வந்திருந்தனர். அவர்களுக்கான வரவேற்பு நாற்காலிகள் மேடை அமைத்தது உள்ளிட்ட செலவுகளுக்காக 17.60 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமாநிலங்களில் கனமழை 50 ஆயிரம் பேர் பரிதவிப்பு



இந்தியாவின் உத்திரபிரே தேசம், பஞ்சாப், ஹரியானா, உத்தரகாண்ட், ஹிமாச்சல் பிர தேசம், குஜராத்,ஒடிசா உள் ளிட்ட மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது. உத்தரகாண் டில் கடந்த ஐந்து நாட்களாக பெய்து வரும் கன மழை மற் றும் வெள்ளத்தால் 50ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட் டுள்ளன.

பாகியவதி, மந்தாகினி,காலி உள்ளிட்ட நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ருத்ர பிரயாக், சமோலி,உத்திரகாசி ஆகிய மாவட்டங்களில் மின் சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. நிலச்சரிவில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர். இதேபோன்று உத்திரபிரேதேசத்தில் ராம் கங்கா நதியில் வெள்ளப்பெ ருக்கு ஏற்பட்டது. ஒரிசா மாநிலம நயாகர் மாவட்டத்தில் 50 கிரா மங்கள் வெள்ளநீரால் சூழப்பட் டுள்ளன. இதனால் 50ஆயிரத் திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப் பட்டுள்ளனர். வெள்ளப பெரு க்கை சமாளிக்க அனைத்து மாவட டங்களிலும் உசார் நிலை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

# முருகனை சந்திக்க தடை நளினி உண்ணாவிரதம்



கணவர் முருகனை சந்திக்க தடை விதிக்கப்பட்டதால் சிறை யில் தொடர்ந்து நளினி உண் ணாவிரதம் இருந்து வருகிறார். வேலூர் மத்திய சிறையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கு கைதிகளான முருகன் ஆண்கள் சிறையிலும், அவரது மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். அவர் கள் 15 நாட்களுக்கு ஒருமுறை சந்தித்துப் பேச அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. கடந்த சில நாட் களுக்கு முன் வேலூர் சிறை யில் முருகனிடம் இருந்து பணம், செல்போன் பறிமுதல் செய் யப்பட்டதாக கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து முருகன், நளினியைச் சந்திக்க இரண்டு வாரத்துக்கு அனுமதி மறுக்கப் பட்டது.

இதனால் கடந்த 12ஆம் திகதி அவர்கள் சந்திக்கவில்லை. கணவரை சந்திக்க தடை விதிக கப்பட்டிருப்பதால் நளினி, சிறை யில் அளிக்கப்படும் உணவை மறுத்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

நளினியை சமாதானப்படுத்த சிறையில் அதிகாரிகள் தொடர் ந்து அவரிடம் பேச்சு நடாத்தி வருகின்றனர். நளினி தன்னை விடுதலை செய்யக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது.

உலகச் செய்திகள்

# மலேசிய விமான விபத்து நடிகர்கள் அனுதாபம்





மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு பொலிவுட் நடிகர்- நடிகைகள் தங்களது கண்டனங்களையும் அனுதாபத் தையும் தெரிவித்துள்ளனர்.

மலேசியன் ஏயர்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்த மான போயிங் 777 ரக விமா னம், 280 பயணிகள் மற்றும் 15 சிப்பந்திகளுடன் நெதர்லாந்து தலை நகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம் பூருக்கு பறந்து சென்று கொண்டிருந்தபோது ஏவுகணைத் தாக்கு தலுக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 295 பேரும் பரிதாபமாக பலியானார்கள்.

இத்தகைய கொடிய செயலுக்கு தங்களது சமூக வலைதளப் பக்கங்களில் பொலிவுட் நடிகர்களான பிரியங்கா சோப்ரா ஷாருக்கான் ,ஷாகீத் கபூர் ,அலியா பட் ,கரண் ஜோஹர்,பிபாஷா பாசு,அனுபம் கேர் ஆகியோர் விமான விபத்தில் பலியானவர் களுக்காகவும், அவர்களது குடும்பத்தினருக்காகவும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

# உக்ரைன் வான்பகுதிக்குள் செல்வதற்கு தடை உத்தரவு

மலேசிய விமான விபத்தை அடுத்து உக்ரைன் வான்பகுதியில் செல்ல வேண்டாம் என அமெரிக்கா, இந்தோனேஷியா மற்றும் தாய்வான் நாடுகள், தங்கள் நாட்டு விமான நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளன

இது குறித்து அமெரிக்க விமான நிறுவன அதிகாரி ஒருவர் கூறும்போது, "கிழக்கு உக்ரைனில் சமீபகாலமாக நடந்து வரும் நடவடிக்கைகள் மிகவும் அபாயகரமாக உள்ளன. எனவே உக்ரைனின் கிரைமியா பகுதி மற்றும் கருங்கடலை சுற்றியுள்ள பகுதிகள் வழியாக அமெரிக்க விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது" என்றார்.

இதைப்போல, "சர்ச்சைக்குரிய பகுதிகளான உக்ரைன் மற்றும் காஸா பகுதிகள் வழியாக பறக்க வேண்டாம்" என இந்தோனேஷிய விமான நிறுவனத்துக்கு அந்நாட்டு அதிபர் சுசிலோ பம்பாங் உத்தரவிட்டுள்ளார். மேலும், "தங்கள் நாட்டு விமானங்கள் உக்ரைன் பகுதியில் நுழைவதற்கு உடனடியாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தாய்வான் அரசும் தெரிவித்துள்ளது.

# கண்டுபிடிப்பு தரவரிசை சுவிஸ் முன்னிலை

உலகக் கண்டுபிடிப்பு தரவரிசையில் சுவிஸ்சர்லாந்து இடம் பெற்றுள்ளது. பிரிஸ் (BRICS) என்ற அமைப்பானது, உலக நாடுகளின் வளர்ச்சித் திட்டங்கள், பொருளாதாரம் போன்றவற்றில் தங்கள் நாட்டினை எவ்வாறு முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றுள்ளனர் என்ற ஆய்வினை நடாத்தியுள்ளன.

இதில், சுவிஸ்சர்லாந்து தரவரிசைப்பட்டியலில் இடம்பெற்றுள் ளது, மேலும் பிரிட்டன், சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் சீனா, சராசரி நிலையில் உள்ளது, ஆசிய நாடுகளில் குறிப்பாக தென் கொரியா, இந்தியா போன்ற நாடுகள் வளர்ச்சி திட்டங்களை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மக்களின் தேவையறிந்து சேவையாற்றக்கூடிய பிரதிநிதிகளை தக்கவைத்துக்கொள்ள வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மக்களின் நலனில் அக்கறை கொண்டு புத்திசாதுரியமாக சிந்தித்து செயற்படுகின்ற தலைவர்கள் கிடைப்பது அரிது அதன் காரணமாகவே இன்றும் எமது மக்கள் அரசியல் ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே அவ்வப்போது உருவாகின்ற புத்திசாதுரியமும் மக்கள் நலனையும் தன்னகத்தே கொண்ட தலைவர்களை மக்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பன்னங்கண்டியில் அமைக்கப்பெற்ற பொது நோக்குமண்டப திறப்புவிழாவில் கடந்த சனிக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இன்றுள்ள பல அரசியல்வாதிகள் அனைத்து விடயங்களையும் அரசியலாக நோக்குவதால் மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் தொடக்கம் அனைத்து விடயங்களும் ஸ்தம்பிதம் அடையும் நிலை உருவாகியுள்ளது. பன்னங்கண்டி என்பது கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பழமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான கிராமத்தின் பெயர் ஆனால் அந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாக நிவர்த்தி செய்யப்படாத பிரச்சினையாகவே அமைந்துள்ளது.

அதாவது இம்மக்கள் எதிர்கொண்டு வரும் காணி உரிமம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அதற்கு தீர்வுகாண்பதென்பது சாத்தியமற்ற விடயமாகவே அமைந்து விட்டது. இவ்வாறான பாதிக்கப்பட்ட மக்களின் இருப்பிடம் தொடர்பான பிணக்குகளுக்கு தீர்வுகாணக்கூடிய மண்ணின் மகிமை எனும் ஒரு செயற்றிட்டம் நடைமுறைக்கு வந்தபோது அனைத்து விடயங்களையும் அரசியல் நோக்குடன் சிந்திக்கின்ற செல்வந்தர்களின் வாழ்வியலைமட்டும் பாதுகாக்க முனைகின்ற சில அரசியல்வாதிகளால் அது தவிடு பொடியாக்கப்பட்டுவிட்டது.

அதைத்தொடர்ந்து இம்மக்களின் மேம்பாட்டுக்காக செயற்படுத்துவதற்கு தயாராகவிருந்த வீட்டுத்திட்டம் உட்பட பல செயற்திட்டங்களும் இம்மக்களுக்கு எட்டாக்கனியாகிப் போனது. இதனால் இவர்கள் ஒவ்வொரு மாரி காலங்களிலும் இருப்பிடமற்றவர்களாக அலைந்து திரிகின்றனர். இந்நிலை அடுத்து வரும் காலங்களிலும் தொடரப்போகிறது. ஆனால் இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட எந்த அரசியல்வாதிகளும் கவலையடைந்தது கிடையாது. குறிப்பாக இந்தப் பொது நோக்கு மண்டபத்தை அமைக்கும் இடத்தை பெறுவதில் கூட இந்த கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் பல சிரமங்களை எதிர்கொண்டனர். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் நுட்பமான அணுகுமுறைகளின் ஊடாக பொதுநோக்கு மண்டபத்தினை அமைப்பதற்காக இடம் கிடைக்கப்பெற்றது என்றார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் மனோகரன், கரைச்சி பிரதேச செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் அமல்ராஜ் கிராம அலுவலர் திருமதி ஜீவநாயகம் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச்சங்கத்தினர், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# உள்நாட்டு செயல்முறை மூலம் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு

## ஆதரவளிக்கும் தன்சானியா

(கொழும்பு)

உள்நாட்டு செயல் முறையின் மூலம் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படும் என தன்சானியா வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சர் பேர்னாட் மெம்பே தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னர் இலங்கை பெரும் முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை வந்துள்ள தன்சானிய அமைச்சர் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைப் போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டு ஏனைய நாடுகளுக்கு மத்தியில் உயர்ந்த இடத்தில் இருக்கின்றது.

மாற்றங்களை ஏற்படுத்தி காண்பிக்க 5 ஆண்டுகள் போதுமானதல்ல. 9 மாதங்களுக்கு முன்னர் நாங்கள் இலங்கைக்கு வந்திருந்தோம். 9 மாதங்களுக்குப் பின்னர் இலங்கையில் மாற்றங்களை காண்கின்றோம் எனவும் தன்சானிய வெளி விவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் தன்சானியாவுக்கும் இடையில் மூன்று இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

தென்னை ஆராய்ச்சி, அரசியல் கலந்துரையாடல்கள் மற்றும் ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவை ஏற்படுத்துவது தொடர்பில் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான மதிப்புகள் மற்றும் அபிலாஷைகளை பகிர்ந்து கொள்வது பலப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அத்துடன் தன்சானியா சகல நேரங்களிலும் இலங்கை தொடர்பில் உண்மையாக செயற்பட்டு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# காரைநகர் சிறுமி துஷ்பிரயோகம் 7 கடற்படையினருக்குப் பிணை

காரைநகர் ஊரிப் பகுதியில் 12 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7. கடற்படை வீரர்களுக்குப் பிணையில் செல்ல சிறுவர் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த வாரம் 12 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காரைநகர் ஊரிப் பகுதியில் உள்ள கடற்படை முகாமில் இருந்த 7 கடற்படை வீரர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி 7 கடற்படை வீரர்களை ஊர்காவற்துறை பொலிஸார் யாழ்.குருநகர் சிறுவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது, 7 கடற்படை வீரர்களும் அடையாள அணிவகுப்பிற்குட்படுத்தப்பட்டதுடன், நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி வழக்கினை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சிறுவர் நீதிமன்ற நீதிபதி க.ஜீவராணி மேற்படி 7 சந்தேக நபர்களையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (25)

## வடமாகாண...

பாரியாரும் முன்பள்ளி சிறார்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

இந்நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ரூபினி வரதலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (25)

## எழிலன்...

இதனால் நீதிமன்றுக்கு வருகை தந்த அனந்தி மாற்று வழியின் ஊடே நீதி மன்றுக்குள் சென்றுள்ளார். இறுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப் பாளர் ச.கனகரத்தினத்திடம் மகஜரைக் கையளித்தனர். (29,40)

## போரில்...

வாழ்ந்து வந்தோம். பொதுமக்கள் பொலிஸாருக்கு உளவுத் தகவல்களை வழங்கி வந்த காரணத்தினால் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வந்தோம். 2000 ஆம் ஆண்டில் இரண்டு பேர் கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாக வெளிநாடு சென்றோம். 2009 ஆம் ஆண்டில் மூன்றாவது நபர் வெளிநாட்டுக்குச் சென்றார்.

மலேசியாவில் நாம் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டோம். புலிகள் இயக்கத்தை மீள இயங்கச் செய்ய இரகசியமாகத் திட்டங்களை வகுத்தோம். மலேசியாவில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தினோம்.

இலங்கையில் சில புலி உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். எவ்வாறெனினும் எமது எதிர்பார்ப்புக்கள் முற்று முழுதாக தோல்வியடைந்தது எனத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மூன்று தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களும் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் இதனைத் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## இலங்கை....

என்று ஒன்று நடக்கவில்லை. அதற்கு உதாரணமாக ஐக்கிய நாடுகள் பிரேரணையிலேயே இலங்கையில் இன அழிப்பு ஒன்று இடம்பெற்றதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு இருக்கையில் எவ்வாறு இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதே கேள்வியாக உள்ளது என்றும் கூறினார்கள்.

மேலும், மோடி அரசாங்கமா னது இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்கே முதலாவதாக முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதேபோல் இந்தியாவின் நட்பு நாடுகளையும் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி முன்னோக்கி அழைத்துச் செல்வதே இந்தியாவின் நோக்கமாகும் என்று தெளிவுபடுத்தினார்கள்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் இலங்கையின் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், புத்திஜீவிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# 550 குளங்களை காணவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்பட்ட 700 இற்கும் மேற்பட்ட சிறியளவான நீர்ப்பாசன குளங்களில் தற்போது 30 வீதமான குளங்கள் மட்டுமே அதிகாரபூர்வ பதிவேடுகளில் காணப்படுவதாக மாவட்ட கமத்தொழிற் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில பிரதேசங்களில் குளங்கள் மண் போட்டு நிரப்பப்பட்டு மக்கள் குடியிருப்புகளும் அரச கட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட கமத்தொழில் சேவைகள் உதவி ஆணையாளரின் தகவல்களின் படி, 1976 ஆம் ஆண்டுக்கு முன்னர் 786 சிறிய நீர்ப்பாசன குளங்கள் பதிவேடுகளில் இருந்துள்ளன.

ஆனால், தற்போதைய அதிகாரபூர்வ பதிவேடுகளின்படி இந்த எண்ணிக்கை 233 ஆக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையுடன்...

வசதிகள் போன்றவற்றையும் இந்தக் குழுவினர் பாராட்டியுள்ளனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் சுப்பிர்மணியசுவாமி தலைமையில் பாரதிய ஜனதாக் கட்சியின் உறுப்பினர்களான டாக்டர் சுரேஷ்பிரபாகர்பிரபு, டாக்டர் சாரிஷேசாத்திரி இராமானுஜன், டாக்டர் சுவாப்பன் தாஸ்குப்தா மற்றும் பேராசிரியர் மாதவ் நல்பட் ஆகியோரும்,

இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் சுனிமல் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## விசாரணைக்குழு....

நவநீதம்பிள்ளை கேட்டிருந்தார்.

எனினும், ஐ.நா. விசாரணைக் குழுவின், இணைப்பாளர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையாரை, இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அதிகாரபூர்வமாகச் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்று ஐலண்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசுக்கு, கடந்த 5 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எழுதிய கடிதம் ஒன்றிலேயே, சன்ட்ரா பெய்டாசை, இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால். இந்த விசாரணையைப் புறக்கணிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ள நிலையில், இந்தச் சந்திப்புத் தேவையற்றது என்று அரசாங்கம் கருதுவதாக ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது.


## இராணுவ...

மக்கள் இராணுவ வாகனத்தை மறித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் பொதுமக்களிற்கிடையேயும் முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும், பவளைச் செலுத்திய இராணுவ வீரரைப் பொலிஸார் கைது செய்ததுடன், குறித்த பவள் வாகனத்தையும், மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதை அடுத்து அவ்விடத்தில் பதற்றம் தணிந்தது. (70)

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும்

## அமைச்சர் டியூ தெரிவிப்பு



நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக்கட்ட வேண்டுமென அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் அமைச்சர் டியூ குணசேகர இவ்வாறு தெரிவித்தார்.

இடதுசாரித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா மரணப் படுக்கையில் இருந்துகொண்டு அன்று வெளிப்படுத்திய விமர்சனக் கருத்துக்கள் எல்லாம் இன்று உண்மையில் நிரூபணமாகியுள்ளன.

அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையே மோதல் ஏற்படும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரம் தாழ்ந்துபோவார்கள். அமைச்சர்கள் தரம் தாழ்ந்துபோவார்கள். அரசியல் கலாசாரம் மாறிப் போகும். இவை எல்லாவற்றையும் அவர் அன்றே எதிர்வு கூறியிருந்தார் என்றார் அமைச்சர் குணசேகர.

இலங்கையில் தற்போது ஜனாதிபதி ஆட்சி முறையை வைத்திருக்க வேண்டும் என்று எந்தவொரு அரசியல் கட்சியும் கோரவில்லை.

இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை கொண்டுவந்த ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று எங்கள் நிலைப்பாட்டில் தான் இருக்கின்றது. இந்த ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் 3 இல் 2 அல்ல 6 இல் 5 பலத்தைக் கூட பெற்றுக்கொள்ள முடியும். அரசியலமைப்பில் ஒரு சிறிய திருத்தம் போதும் இதனை மாற்றுவதற்கு.

ஆட்சி அதிகாரம் தனியொரு மனிதரின் கையில் இருக்கக் கூடாது.. நாடாளுமன்றத்திடமே இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் பெண்ணின் சடலம் முல்லையில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

8 ஆம் வட்டாரம், மந்துவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சசிக்குமார் வசந்தராணி (வயது - 35) என்பவரின் சடலமே அவரது வீட்டின் சமையலறைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 3.00 மணியளவில் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்கள் குழு மோதல் படுகாயமடைந்தனர் ஐவர்

(சுன்னாகம்)

புன்னாலைக்கட்டுவன் மாத்தளோடையைச் சேர்ந்த இரு பெண்கள் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஐந்து பெண்கள் படுகாயமடைந்து தெலலிப்பளை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மகாலிங்கம் செல்வராணி (வயது - 57), மகாலிங்கம் பகிந்தா (வயது - 30), சசிதரன் ஆனந்தி (வயது 41), குமரேசன் ஜெனித்தா (வயது - 30), மற்றும் சின்னராசா ஞானேஸ்வரி (வயது - 60) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் அவ்வூரைச் சேர்ந்த பெண்ணொருவரைக் காதலித்து பெண்ணைத் தூக்கிச் சென்றமை தொடர்பில் இரு பெண்கள் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இவ்வாறு கைகலப்பாக மாறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தென்பகுதி பெண் கஞ்சாவுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பேருந்து நிலையத்தில் கஞ்சா வைத்திருந்த தென்னிலங்கையை சேர்ந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையை சேர்ந்த 51 வயதுடைய குறித்த பெண் யாழ். பேருந்து நிலையத்தில் கஞ்சா பொதிகளுடன் இருந்த போது பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடமிருந்து 2 கஞ்சாப்பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 28 ஆண்டுகளின் பின்னர் லோர்ட்ஸில் சாதித்தது இந்தியா



(லோர்ட்ஸ்)

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 28 ஆண்டுகளுக்குப் பின்னர் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் இந்திய அணியை துடுப்பெடுத்தாடக் கேட்டுக்கொண்டது. இதன்படி முதல் இனிங்ஸில் இந்திய அணி 295 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரஹானே 103 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலளித்து ஆடிய இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் 319 ஓட்டங்களைப் பெற்றது. பலன்ஸ் 110 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் புவனேஷ்வர் குமார் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

24 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 342 ஓட்டங்களைப் பெற்றது. முரளி விஜய் 95 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 319 என்ற வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து இஷாந் சர்மாவின் பந்துவீச்சில் நிலைகுலைந்து 223 ஓட்டங்களையே பெற்று 95 ஓட்டங்களால் தோல்விகண்டது.

பந்துவீச்சில் 7 விக்கெட்டுக்களை கைப்பற்றிய இஷாந் சர்மா ஆட்டநாயகனாக தெரிவானார்.

1986 ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையில் இந்தியா லோர்ட்ஸ மைதானத்தில் வெற்றிபெற்ற நிலையில் 28 ஆண்டுகளின் பின்னர் தற்போது மகேந்திர சிங் டோனி தலைமையிலான அணி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன இலங்கையர் பாகிஸ்தானில் தடுப்புக்காவலில்

பல காலமாக காணாமற்போயிருந்தாக கூறப்படும் இலங்கையர் ஒருவர் பாகிஸ்தானின் பெஷாவார் பொலிஸாரின் காவலில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

மொஹமட் சாமன் என்ற இந்த இலங்கையர் பாகிஸ்தானின் ஹைரபாத்தில் பிரதேசத்தில் வைத்து காணாமற்போனதாகவும் அவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்பட்டது.

இந்த நிலையில் அவர் பெஷாவார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த யூன் மாதம் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், இலங்கை நபருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இல்லை என்பதால் அவரை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் அவரை விடுதலை செய்யாது பெஷாவார் பொலிஸார் தடுத்து வைத்துள்ளமை தொடர்பான தகவல்களை செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

தன் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை எனவும், ஆனால் தன்னை பொலிஸார் தடுத்து வைத்துள்ளதாகவும் இலங்கை நபர் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஊடகங்களில் தோன்றிய இலங்கை நபர் மீண்டும் காணாமற்போயுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# அரச காணி குத்தகைக்கு எதிர்த்து ஆர்ப்பாட்டம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதிரவேங்கை வைரவர் ஆலயத்தின் முன்னால் உள்ள அரச காணியினை தென்னிலங்கையைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கியமைக்கு எதிராக குறித்த காணியில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு எதிராக போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

குறித்த காணி தொண்டமான் நகர் உதிரவேங்கை ஆலயத்தின் கீழ் இருந்தது என்றும், அதில் குறித்த கிராமத்தின் விளையாட்டுக்கழகமும் பயன்படுத்தி வந்த நிலையில் தொண்டமான்நகர் கிராமத்தில் உள்ள பொது அமைப்புகளுக்கு தற்போதும் போதிய காணிகள் இல்லாத நிலையில் குறித்த பொதுக் காணியினை தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு நீண்ட காலக் குத்தகையில் வழங்கியிருப்பது அந்த மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

அது ஒரு அரச காணியெனவும் குறித்த காணியினை அரச காணி சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் பிரதேச மற்றும் மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுவின் அனுமதியுடனும் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ளது. மற்றையது நீதிமன்ற வழக்கில் எங்களது நிறுவனம் தொடர்பாக வழக்கு இடம்பெற்றதாக இல்லையெனத் தெரிவித்த பிரதேச செயலர் தான் ஒரு அரச அதிகாரி என்றும் அதனால் அரசின் சட்ட திட்டங்களையும் கொள்கைளையும் நடைமுறைப்படுத்துவதே தனது கடமை எனவும் தெரிவித்தார்.

குறித்த தொண்டமான் நகர் காணி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் 2013 ஆம் ஆண்டு மே மாதம் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (29)

# நுகர்வோர் சட்டம் குறித்து வர்த்தகர்களுக்கு தெளிவூட்டல்

நுகர்வோர் சட்டம் தொடர்பில் வர்த்தக சமூகத்தை தெளிபடுத்தவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் இந்த செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக்ளஸ் கூறியுள்ளார்.

நுகர்வோர் சட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் நடவடிக்கை ஏற்கனவே காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டார்.

வர்த்தக சமூகத்திற்கு நுகர்வோர் சட்டம் தொடர்பில் விளக்கமளிப்பதுடன் நீதியை மீறிச் செயற்படுமிடத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தொடர்பாகவும் இதன்போது தெளிவூட்டப்படுவதாக நுகர்வோர் விவகார சபையின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

சட்டவிதிகளுக்கேற்ப செயற்படுமிடத்து நுகர்வோரின் நம்பிக்கையை பெற்றுக்கொள்வதுடன் வர்த்தக நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னோக்கி கொண்டுசெல்லமுடியும் என்பது

தொடர்பிலும் தெளிவுபடுத்துவதே இதன் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.